விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 266 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 25 திங்கட்கிழமை (11.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தையிட்டியில் காணி சுவீகரிப்பை எதிர்த்து நாளை போராட்டம்

### அணிதிரளுமாறு முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக் காணியை சுவீகரிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கே.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தடுத்து நிறுத்தி மண்ணைப்பாதுகாக்க அனைவரும் அணிதிரளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தையிட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரைக் காணியை ஆக்கிர 15

சிறுமியின் கை அகற்றப்பட்ட

## விசாரணை அறிக்கை இன்று கையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் எட்டு வயதுச் சிறுமியின் இடது கையின் மணிக்கட்டுப் பகுதி அகற்றப்பட்டமை தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தால் நடத்தப்பட்ட விசாரணையின் முதற்கட்டம் நிறைவு பெற்றுள்ளது.

இது தொடர்பான அறிக்கை மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரிடம் இன்று கையளிக்கப்படும் 15

## நாயன்மார்கட்டில் வாள்வெட்டு

### ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரில் சென்ற இனந்தெரியாத நபர்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிய 15

# ஜெனிவா கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

### இலங்கை விவகாரமும் இன்று எடுத்துக் கொள்ளப்படும்

- முதல் நாளிலேயே இலங்கை தொடர்பிலான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை.
- வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் இரண்டாம் வாரத்தில் விரிவான ஆய்வு.
- உறுப்பு நாடுகளால் இலங்கை மீது வலுவான அழுத்தம் பிரயோகிக்கப்படும் என எதிர்பார்ப்பு.

(16ஆம் பக்கம் பார்க்க)



## வாள்வெட்டுத் தாக்குதலில் தாய், மகள் படுகாயம்

### நீர்வேலியில் சம்பவம்

(நீர்வேலி)

யாழ்.நீர்வேலியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல் தாய் மற்றும் மகள் மீது வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நீர்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்த தாயும், மகளும் யாழ். 15

உள்ளூராட்சி நிறுவனங்களில்

## தற்காலிக நியமனம் பெற்றவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கத் திட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்போது சுமார் 8,000 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப் படாமல் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டினார். 15

வகுப்பொன்றுக்கான

## மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க கடும் பிரயத்தனம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலையொன்றில் ஒரு வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மாணவர்களை உள்வாங்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலா 15

## மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு மின்சார சபை இதுவரை கோரவில்லை

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரையில் எவ்வித கோரிக்கையும் கிடைக்கவில்லை என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணத்தை 56 வீதத்தால் அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அண்மையில் மின்சார நுகர்வோர் 15

## பேருந்து - மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

அதிசொகுசு பேருந்து - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் 15

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

### ஜனாதிபதி ரணில் உறுதி

(கொழும்பு)



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

**நடுவு நிலை தவறாது நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையில் நம்பிக்கையில்லை சர்வதேச விசாரணையே வேண்டும்

## சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழு

இலங்கையின் நீதித்துறையில் நம்பிக்கையிழந்துள்ள நிலையில் சத்துருக்கொண்டான் படுகொலைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறையொன்றை பெற்றுத்தருமாறு சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழு கோரிக்கையை முன்வைத்துள்ளது.

சத்துருக்கொண்டான் படுகொலையின் 33வது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் பனிச்சையடி சந்தியில் உள்ள நினைவுத்தூபியில் முன்னெடுக்கப்பட்டது.

இதுவரையில், மூன்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியங்களை பதிவுசெய்துள்ளதாகவும் அவற்றில் குறித்த பகுதியில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட இராணுவ அதிகாரிகள் தொடர்பான தகவல்களை வழங்கியபோதிலும் இதுவரையில் தமக்கான நீதி பெற்றுக் கொடுக்கப்படவில்லையெனவும் இதில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நீதித்துறையில் தமக்கு நம்பிக்கையில்லை எனவும் சர்வதேச நீதிப்பொறிமுறையொன்றை இந்தவேளையில் வலியுறுத்துவதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 திகதி மாலை இராணுவத்தினரால் சத்துருக்கொண்டான், கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி ஆகிய கிராமங்களில் நடந்த சுற்றிவளைப்பின்போது சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், இளைஞர், யுவதிகள் என 186 பேர் ஒரே நேரத்தில் கொண்டு செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# நடுநிசியில் ஆவி நடமாட்டம்

## அச்சுவேலிப் பகுதியில் அச்சம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் உயிரிழந்த பெண்ணொருவரின் ஆவி அவரின் வீட்டில் நடமாடுவதான தகவல் வெளியாகியதையடுத்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

அச்சுவேலியில் நடந்த மரணச் சடங்குக்குச் சென்ற பெண்ணொருவர் அங்கு உயிரிழந்த சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றது.

இதனையடுத்து உயிரிழந்த பெண்ணின் வீட்டில் இரவு நேரங்களில் அமானுசசம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் நடுநிசியில் வீட்டில் உள்ள நாற்காலி தன்பாட்டில் அசைவதாகவும் குடும்ப உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த வீட்டில் இருந்தவர்கள் தற்காலிகமாக வேறு வீட்டில் தங்கியிருப்பதாகவும் அறிய முடிகிறது. (ந-33)


## 25வது ஆண்டு நினைவு!



அமரர் பொன்.சிவபாலன்

சட்டத்தரணி

(முன்னாள் யாழ் மாநகர சபை முதல்வர்)



அமரர் க.பத்மநாதன் (A.O)

(நிர்வாக உத்தியோகத்தர்)



அமரர் பொ.பத்மராஜா

(கூட்டமுத்தாளர்)

யாழ். மாநகரப் போக்குவரத்து சம்பந்தமாக நடந்த உயர்மட்ட மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட அனைவரையும் நினைவுகூருவதுடன் இன்றுவரை பூர்த்தி செய்யப்படாத அந்தக் காரியம் எப்போது நிறைவுக்கு வரும் என ஏங்கும்



அமரர் மா.ஈஸ்வரம் (W.E)



அமரர் திருமதி மல்லிகாராஜரட்ணம்

(வரைபடக் கலைஞர்)

தங்க. முகுந்தன் TULF

முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்

(மூளாய்) 077 727 9238

(C-7231)


# குழந்தையை தத்தெடுத்தாலும் மகப்பேறு விடுமுறை

## வெளியானது புதிய சுற்றுநிருபம்

குழந்தையை தத்தெடுக்கும் போது அரச உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கான விசேட சுற்றறிக்கையை பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.


குழந்தையொன்றை தத்தெடுப்பதை விசேட சந்தர்ப்பமாக கருதி அரசாங்க உத்தியோகத்தர் ஒரு வருக்கு அதிகபட்சமாக 04 மாதங்களுக்கு தொடர்ச்சியாக விடுமுறை வழங்குமாறு சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

விடுப்புக்கு விண்ணப்பிக்க, தத்தெடுக்கப்படும் குழந்தையின் வயது 10 மாதங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும் என்றும், குழந்தையின் பிறப்புச் சான்றிதழின் உண்மையான நகலை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கை கூறுகிறது.

இதன்படி, நிரந்தர அரசாங்க பெண் உத்தியோகத்தர் ஒருவர் தத்தெடுக்கப்பட்ட குழந்தையை வளர்ப்பதற்காக அதிகபட்சமாக 04 மாதங்களுக்கு ஊதிய விடுப்பு, அரை ஊதிய விடுப்பு மற்றும் ஊதியம் இல்லாத விடுமுறையை எடுக்க முடியும்.

அதேபோன்று நிரந்தர அரச ஆண் உத்தியோகத்தர் ஒருவர் பிள்ளையை தத்தெடுப்பதற்கு 03 வேலை நாட்கள் கொண்ட விசேட மகப்பேறு விடுமுறையையும் பெற்றுக்கொள்ள முடியும் என பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை பீதாம்பரம்

(ஓய்வு பெற்ற முகாமையாளர்)

கப்புதூவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பீதாம்பரம் அவர்கள் 10.09.2023 அன்று காலமானார்.

அன்னார் பொன் சிவாசினியின் அன்புக் கணவரும் அமரர் வேலுப்பிள்ளை இலட்சுமி ஆகியோரின் புதல்வரும் அமரர் சிவப்பிரகாசம் பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் மதிதரன் (விற்பனையாளர்-செல்லமுத்து புடவையகம்), கேதீஸ்சுரன், கேதிகா (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசீலன் (கொலண்ட்) அவர்களின் மாமனாரும் கனகம்மா, சிவபாஸ்கரன், தயாகரன், அமரர் சிவசக்தி (வளர்மதி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் பொன் சிவாசன், பொன் சிவரஞ்சன், பொன் சிவனேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (11/09/2023) இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கப்புது இலந்தைத்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 138 7466 (கேசா)

(17038)

# மோ.சைக்கிள் விபத்தில்

## படுகாயமடைந்த மூதாட்டி சிகிச்சை பலனின்றி மரணம்

நல்லூர் கோவிலுக்கு சென்ற போது மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நல்லூர் குறுக்கு வீதியை சேர்ந்த இரத்தினசாமி நித்தியசெல்வம் (வயது-74) என்ற ஒரு பிள்ளையின் தாயான மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 4ம் திகதி இரவு 7 மணிக்கு நல்லூர் கோவிலுக்கு செல்வதற்காக யாழ் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியை கடந்த போது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளாகி விழுந்து மயங்கிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த மரணம் தொடர்பான மரண விசாரணையினை யாழ்போதனா வைத்தியசாலை திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (7)


## மணமகள் தேவை

1971 இல் பிறந்த அவிட்டம், கும்பராசி சொந்தமாகத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை (சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது)

(17026)

077 063 4154

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.

மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 071 999 9306
077 138 7596

(C-7232)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.திருமதி. மகாலட்சுமி இராஜலிங்கம்

தோற்றம்
27.08.1934
மறைவு
21.08.2014

### நீங்காது நீளும் லிங்கம்மா நினைவுகள்!



ஆண்டுகள் ஓடுது அன்னையே!
ஆனாலும் மறவோம் உன்னையே!
நீண்டிடும் காலப் பெருவெளியில்;
நீயோ தெரிகிறாய் எம்விழியில்!
மாண்டனை என்று மறப்போமா?
மறுபடியுன் வயிற்றில் பிறப்போமா?
ஆண்டவள் அன்பினால் எம்மை!
அவள்தான் தெய்வம் உண்மை!

கன்னக் குழிவிழும் சிரிப்பும்,
கருணையோடு இரங்கும் சிறப்பும்;
தன்னைப் போலவே மற்றவர்
தம்மை நினைக்கும் பண்பும்,
அன்னை " லிங்கம்மா" க் கிணையாய்
ஒருவரைக் காண்பது அரிது!
முன்னைத் தவம்போல் உதித்தாய்!
முத்தியும் பெற்றாள் எம்தாய்!

தெய்வ அம்சமாய்த் தெரிவாய்!
தெய்வத் தொண்டும் புரிவாய்!
சைவப் பழம்போல் திரிவாய்!
சகலகலா வள்ளி எம்தாய்!
செய்த புண்ணியப் பலனால்
பிள்ளைகள் வாழ்கிறோம் நலமாய்!
உய்ய வைத்தவள் நீதான்
உயிரோடு இல்லையே அம்மா?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(16991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியக் கிண்ணம்-21 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி

16 ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் தற்போது சுப்பர் 4 சுற்று நடைபெறுகிறது. சுப்பர் 4 சுற்றின் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வங்காளதேசத்தை வீழ்த்தி இருந்தது.

இந்நிலையில், கொழும்பில் உள்ள பிரேமதாசா ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுப்பர் 4 சுற்றின் 2 ஆவது ஆட்டத்தில் நடப்பு சம்பியன் இலங்கையும் வங்காளதேசமும் மோதின.

டாஸ்ஸில் வென்ற வங்காளதேசம் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 257 ரன்கள் எடுத்தது.



சமர விக்ரமா அதிரடியாக விளையாடி அரை சதம் அடித்தார். அவர் 93 ரன்னில் அவுட்டானார். குசால் மெண்டிஸ் 50 ரன்னில் ஆட்டமிழந்தார். பதும் நிசாங்கா 40 ரன்கள் எடுத்தார்.

வங்காளதேசம் சார்பில் தஸ்கின் அகமது, ஹசன் மமுத் தலா 3 விக்கெட்டும் ஷோரிபுல் இஸ்லாம் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 258 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேச அணி களமிறங்கியது.

அந்த அணியின் தவ்ஹித் ஹிருடோய் பொறுப்புடன் ஆடி 82 ரன்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், வங்காளதேச அணி 236 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. இதன் மூலம் 21 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பில் தீக்ஷனா, தசுன் சனகா, பதரினா ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். (நி)

## உலக கிண்ண கிரிக்கெட் போட்டி

# சச்சினுக்கு கோல்டன் டிக்கெட் வழங்கிய ஜெய் ஷா



இந்தியாவில் வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலக கிண்ண தொடர் நடைபெற உள்ளது.

இத்தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலக கிண்ண தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் சென்னையில் அவுஸ்திரேலியாவை சந்திக்கிறது. இதற்கிடையே, இந்தியாவின் தலைசிறந்த நட்சத்திரங்களுக்கு உலக கிண்ண போட்டிகளை நேரில் காண பி.சி.சி.ஐ கோல்டன் டிக்கெட் வழங்கி வருகிறது.

இந்நிலையில், பி.சி.சி.ஐ தலைமை செயலாளர் ஜெய் ஷா உலக கிண்ண கிரிக்கெட் போட்டியை நேரில் காண முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு கோல்டன் டிக்கெட் வழங்கி உள்ளார்.

இது தொடர்பான புகைப்படத்தை பி.சி.சி.ஐ தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளது. கோல்டன் டிக்கெட் வழங்கிய பி.சி.சி.ஐ மற்றும் ஐ.சி.சி க்கு சச்சின் டெண்டுல்கர் நன்றி தெரிவித்துள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2910

Search for people, places and things

### பிரணவன்

டீச்சர்- உன் பேரு என்ன?
மாணவி- பொன்னி
டீச்சர்- ஸ்வீட் நேம்



மாணவி- ஸ்வீட் நேம் இல்ல மிஸ். றைஸ் நேம்.

### காவியா

நல்ல செருப்புங்க...300 ரூவா இருக்கும்...உள்ள போறப்ப இருந்தது, வெளியே வந்தா காணோம்...
அப்புறம் என்ன பண்ணீங்க?



சரின்னு என் செருப்பையே போட்டுட்டு வந்துட்டேன்...

### தாரங்கி

ஜாதி, மதம், இனம் , மொழி இதையெல்லாம் தாண்டி வருவது காதல் மட்டுமல்ல,



காய்ச்சலும் தான்.

### செந்தூரன்

வேலை செய்யும் போது ஒருத்தனும் நம்மள கவனிக்க மாட்டாங்க.



ஒரு 5 நிமிஷம் செல்போன பார்த்தால் போதும். எப்ப பாரு செல்ல பார்த்துட்டே இருக்கேன்னு சொல்றது.

### வினோத்

இது என்னடி புதுப் பழக்கம். தினமும் காலையில காலண்டர் தேதியை கிழிச்சு திங்குறது.



டாக்டர் தாங்க உடம்பு ரொம்ப வீக்கா இருக்கு. டெய்லி டேட்ஸ் சாப்பிடுங்கன்னு சொன்னாரு

### வனிதா

மாணவன்: சார் நீங்க கணக்கு வாத்தியார் தானே..??

ஆசிரியர்: ஆமாண்டா.. அதுக்கு என்ன..??

மாணவன்: அப்புறம் ஏன் சார் .?? உங்க நாலாவது பொண்ணுக்கு "அஞ்சு" ன்னு பேர் வச்சீங்க..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சனல்-4 வீடியோ

## சர்வதேச விசாரணைக்கு மைத்திரியும் வலியுறுத்து

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் - 4 தொலைக் காட்சி வெளியிட்டுள்ள வீடியோ தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என "முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சனல் 4 ஊடாக வெளியிடப்பட்டுள்ள தகவல்களை நூறு வீதம் ஏற்கவும் முடியாது. அதேபோல் நிராகரித்து விடவும் முடியாது. எனவே சனல்- 4இல் கூறப்பட்டுள்ள விடயங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். ஏனெனில் இங்கு விசாரணையை ஒப்படைத்து சரிவராது. இங்கு இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் திருப்தியும் இல்லை. சனல்- 4 வீடியோ குறித்து விசாரணை அவசியம் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. ஐ.நாவின் கோரிக்கையின் பிரகாரம் சர்வதேச விசாரணை நடத்துவதே சிறந்தது." என அவர் தெரிவித்தார். (நி)

## சேதமடைந்த நெற்பயிர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும்

### விவசாய அமைச்சர்

(கொழும்பு)

மழையினால் சேதமடைந்த நெற்பயிர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். விவசாய அமைச்சர் பல பிரதேசங்களுக்கு மழையினால் சேதமடைந்த வயல்களை பார்வையிடச் சென்றுள்ளார்.

இந்நிலையில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் அறுவடை செய்யக் கூடிய நிலையில் இருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி, வறட்சி மற்றும் மழையினால் பயிர்ச் சேதங்களுக்கு உள்ளான விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்குமாறு விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி, அதிகாரிகள் இது தொடர்பான தகவல்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)




## மயிலேறிச் செல்லும் மன்னவனே!

ஆறுமுகம் அழகுருவம் அன்புமறை வேலுருவம்
அருளாசி தேடியிங்கே அலைமோதும் கோடிமுகம்
தேரேறி நீபோகும் திசையெட்டும்-உம்
பாதம் தொட்டுப் பதறி அழுகின்றோம் - வேலா எம்
பாவம் போக்க வழியேது?

கலாசாரம் வேர்விட்ட தமிழ் மண்ணில்
கண்முன்னே வாழ்வெட்டு புதுமையிது
வீட்டுக்குள் திருட்டு வீதியில் விபத்து
வாழ்விடங்கள் அபகரிப்பு வேற்று
மதத்திணிப்பு-இதை
வேடிக்கை பார்ப்பதேன் வேலையா?

சூரனைக் கொன்று தேவரைக் காக்க
வேல்கொண்டு நீ வேட்டைக்குச் சென்றாயாம்
நாவரண்டு நடுங்குகையில் - பாட்டிக்கு
நாவற் பழங்கொண் டருளினாயாம்
வேலையா! முருகையா! கந்தையா
நம் தமிழர் யாரையா?

உற்றவர் சுற்றவர் ஊர்கூடி வந்து
காப்பாரின்றி கையேந்தி அழுகின்றோம்
கந்தா ! எம் கண்ணீரைத் துடைக்காததேனையா?

பக்தி,இறை சக்தி மருகுகிறதே
பாழான கஞ்சா கறை பெருகுகிறதே
நம்மவர்க்கு நல்வழி காட்டாமல்
நல்லூரா நீயெங்கே மயிலேறிச் செல்கிறாய்?

சாந்தையூர் வினிஸ்,
பண்டத்தரிப்பு.


## மணிவிழா வாழ்த்து



திருமதி.சாந்தினி குணேந்திரன் (SLTS-I)

(ஆசிரியர்,யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை)

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காய் அரும்பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியரை வாழ்த்தி அவரது ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

Best Wishes

சேவை விபரம்

யா/மண்டைதீவு மகாவித்தியாலயம்
17.08.1988-19.01.1992
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
20.01.1992-31.12.1993
யா/மண்டைதீவு மகாவித்தியாலயம்
01.01.1994-14.02.1996
யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்
19.11.2003-31.12.2007
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்
01.01.2008-03.01.2016
யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை
04.01.2016-11.09.2023.

வாழ்த்துவோர்
பாடசாலைச்சமூகம்,
யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை

(16963)


## உ.கிழங்கிற்கு விதிக்கப்பட்ட வரி நீடிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மீது விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தக வரியை மேலும் 4 மாதங்களுக்கு நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கான விசேட சரக்கு வரி செப்டெம்பர் 8 ஆம் திகதி முதல் அடுத்த 4 மாதங்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. (நி)

## இராசிபலன்

11.09.2023
ஆவணி 25, திங்கட்கிழமை
துவாதசி பின்னிரவு 1.49 மணிவரை

பூசம் முன்னிரவு 10.48 மணிவரை
சுபநேரம் -12.03-1.33 மணிவரை
இராகுகாலம்-7.33-9.03 மணிவரை

சந்திராஷ்டமம்-
மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப்பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்**: குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்**: உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், தன வரவு திருப்திகரமானதாக அமையும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய நட்புகள் அறிமுகமாகலாம்.

**கடகம்**: தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்**: தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி**: குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்**: செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், ஆற்றல் மிக்கவர்களில் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**: எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தியுண்டு.

**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் சுணக்கம் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் கூடும்.

**மகரம்**: உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்**: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்**: வியாபார விருத்தியுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் திருப்தி தரும், குடும்பநலனில் அக்கறை கூடும்.

நாளைய தினத்தை இறைவனாக நம்பு, இன்றைய தினத்தை அனுபவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு நாளும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் சுன்னாகம் வாழ்வகம் செல்லா மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், சிறப்பு அதிதிகளாக உடுவில் பிரதேச செயலாளர் தவச்செல்வம் முகுந்தன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் தில்லையம்பலம் வரதன், இலங்கை மின்சார சபை, சுன்னாகம் மின் அத்தியட்சகர் துரைசிங்கம் சுதாகரன், மட்டக்களப்பு ஆரையம்பதி, கலாசார உத்தியோகத்தர் ஆறுமுகம் பரமேஸ்வரன், கௌரவ அதிதியாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

# நிழற்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய நம்பிக்கை நிதியம்- இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையுடன் இணைந்து பிரிட்டிஸ் கவுன்சிலின் ஆதரவில் இன்று திங்கட்கிழமையிலிருந்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை "இலங்கையில் ஒரு ஸ்கொட்லாந்து ஓவியர்: எட்வேட் அட்கின்சன்ஸ் ஹோணல்" என்ற நிழற்படக்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

நுண்கலைத்துறையின் காட்சிக்கூடத்தில் நிகழும் இக்காட்சியை கட்டடக் கலைஞரும் கலை வரலாற்றாசிரியருமான ஸ்மத் ரகீம் எடுத்தாளுகை செய்துள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மன்னார் முத்துக்குளிப்பு, மலையகத்தில் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையின் தொடக்கம் மற்றும் தென்னிலங்கை மக்களின் பண்பாடு சார்ந்த 43 நிழற்படங்கள் இதில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (நி)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வு நாளை 12 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு இடம் பெறும்.

இதில் வாத்திய இசையரங்கு நிகழ்வில் கீபோட்- துஷ்யந்தன் பிரசன்னன், வயலின் இ. நிரோஜன், மிருதங்கம்- க. திவ்யாசாகர்,கடம்- ந. கேதாரநாத் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம் பெறவுள்ள நடன அரங்கு நிகழ்வில் நட்டுவாங்கம்- துஸ்யந்தி சுகுணன், பாட்டு- அ. அமிர்த லோஜனன், வயலின்- அ. ஜெயராமன், மிருதங்கம்- ம. லோகேந்திரன், கீபோட்-ந. செல்வச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

# நல்லூர் உற்சவகால போட்டியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தினை முன்னிட்டு நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடலினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு நல்லூர் பூங்காவன உற்சவத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

கனிஷ்ட பிரிவில் பரிசு பெறுவோர் விபரம்,நந்தகுமார் வினுசியா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), பா.யசிந்தா (யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), சுதர்சன் கிருஷிகா, (யா/சுண்டுக்குளிமகளிர்கல்லூரி), சுதாஸ்குமார் துளசிகன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), தி.அனிஸ்காந் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), உ.கிரோஷிகா (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), கு.லக்ஸிகா- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், ஜானககுமார் ஜயனிகா (யா/சுண்டிக்குளி மகளீர் கல்லூரி), ந.அனுஸ்கா (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), சந்திரகுமார் சாகித்தியன் (யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்),ம.தனுஜன் (யா/செங்குந்தா இந்து கல்லூரி).

மத்திய பிரிவில் பரிசு பெறுவோர் விபரம் , அபிநயா சிறிகந்தராஜா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்),இளநிலா மதீஸ்வரன்( யா/ ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), சு.கேம்சிதா (யா/கொக்குவில் இந்து கல்லூரி) ,அபிசானி அனுசன் - (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ,ருட்சாரணி அகிலேஸ்வரன்(யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி),சசிக்குமார் பவிசன் (யா/யாழ்ப்பாணம் இந்து கல்லூரி), ருசாளினி அன்பழகன் (யா/இந்து மகளிர் கல்லூரி, கம்சனா கோணேஸ்வரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரஸ்ணவி குகதர்சன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), ஜஸ்மினி விஜயரூபன் (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

மேற்பிரிவில் பரிசு பெறுவோர் விபரம்,ந.டிலக்ஷிகா- (யா/திருக்குடும்ப கன்னியர் மடம் , குணராஜா பானுஜா (யா/ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), ப.திவ்வியா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ட.சஜிந்தன் (யா/யாழ்ப்பாணம் இந்து கல்லூரி) ,ப.ஆரணி (யா/வைத்தீஸ்வரா கல்லூரி) , தவகுமார் டிசாளினி (யா/இந்து மகளிர் கல்லூரி), இராஜேஸ்வரன் தரணிகா( யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சிவகுமார் சர்மிதா (யா/அத்தியார் இந்து கல்லூரி), க.சஜீனா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), த.டர்சிகா (யா/ ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி).

பரிசில் பெறும் மாணவ, மாணவிகளை கலாசார உடையுடன் வருகை தருமாறு விழா ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (நி)

# எட்டுத்திக்கும் கவி முழங்கிய எட்டயபுரக் கவிஞன்

## சுப்பிரமணிய பாரதியாரின் 102 ஆவது நினைவுதினம் இன்று



தமது கவித் திறமையினால் இவ்வையகத்தை பாலித்திட முயன்ற பாரதியார் வெறுமனே அரசியல் விடுதலைக்காக மட்டும் கவிதை மழை பொழியவில்லை. அரசியல் விடுதலையின் கூடவே சமுதாயம், பொருளாதாரம், சமயம், பண்பாடு, பெண் விடுதலை,தீண்டாமை முதலிய துறைகளிலும் விடுதலையை வேண்டி நின்றார். தாழ்வுற்று வறுமை மிஞ்சிச் சுதந்திரம் தவறிக் கெட்டு பாழ்பட்டு நின்ற பாரத மக்களின் பரிதாப நிலையை ஊன்றிக் கவனித்த பாரதியார் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் தீர்வு மார்க்கங்களையும் தமது கவிதைகளினூடாக காட்டியுள்ளார்.

ஆரம்பத்தில் இலக்கண மறியாத கவிஞனாகவும் பண்டார பாட்டுக் காரனாகவும் வேதாந்த கவிஞனாகவும் கசடறக்கற்ற பண்டித வர்க்கத்தினாலும் சமயப் பெரியோர்களாலும் மதிப்பிடப்பட்ட பாரதியார் காலப்போக்கில் தேசிய கவிஞனாகவும் மறுமலர்ச்சிக் கவிஞனாகவும் புரட்சிக் கவிஞனாகவும் நவயுகக் கவிஞனாகவும் உலக மகா கவிஞனாகவும் திகழலானார்.

பாரதியார் கவிதைகள் இயற்றுவதோடு மட்டும் அமைதி கொண்டவரல்ல. மிக்க இளம் வயதிலே சுதேசமித்திரன், இந்தியா முதலிய பத்திரிகைகளில் அரசியல், சமூகம், பண்பாடு, கல்வி, சமயம், பொருளாதாரம், தத்துவம்,அறிவியல் வளர்ச்சி, உலக விவகாரங்கள் என்பன பற்றியெல்லாம் ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய கட்டுரைகளை எழுதினார். கதைகள், நாடகத்துறைகள், வசனக் கவிதைகளை ஆக்கினார். பாரதியாரின் கவிதைகளிலும் பார்க்க உரைநடை ஆக்கங்களே அளவில் மிக அதிகமானவை.

வரலாற்று நாயகனான பாரதியார் மகா கவிஞனாக மட்டுமன்றி தலைசிறந்த பத்திரிகையாளனாகவும் எழுத்தாளனாகவும் திறனாய்வாளனாகவும் ஆராய்ச்சியாளனாகவும் தலைசிறந்த தத்துவஞானியாகவும் சமூக விஞ்ஞானியாகவும் சொற்பொழிவாளனாகவும் திகழ்ந்தார். தமிழ் நாட்டையும் தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும் போற்றிய பாரதியார் அகன்ற பாரத ஏனைய இனங்களையும் மொழிகளையும் புகழத் தயங்கவில்லை. சக்தி தாசனாக இருந்தும் ஏனைய இந்து மதத் தெய்வங்களையும் உச்சியில் வைத்து போற்றினார். கிறிஸ்துவின் பெருமைகளை உள்ளத்தை ஈர்க்கும் வகையில் உவகையுடன் பாடினார். சொல்லாலும் மனத்தாலும் தொடரெனா பெருஞ்சோதியான அல்லாவின் பெருமையை சொற்பொழிவாற்றினார்.

தமிழகக் கவிஞனாக முளைவிட்டு இந்தியக் கவிஞனாக வேர் பாய்ச்சி மிகக் குறுகிய காலத்தில் உலக மகா கவியாக உயர்ந்து மலர்ந்த பாரதியாரது விசாலப் பார்வையும் பண்புள்ளமும் தமிழகத்தையும் தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும் நேசிக்கத் தொடங்கி பாரதம், பாரத மக்கள், பாரத மொழிகள் என அகன்று மனுக்குலம் முழுவதையும் அகில உலகத்தையும் ஆட் கொள்ளலாயிற்று. பாரதியாரது ஆக்கங்கள் பலவற்றிலும் ஊடுருவி விளைவித்து நிற்பது கிருதயுகத்தை கேடின்றி நிறுத்த முயலும் சிந்தனைப் போக்கேயாகும்.

மனிதாபிமான உணர்வு கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த பாரதியாரின் உண்மை சமூகத்தின் ஒரு கூறான பெண்ண இனத்தை ஆண் இனம் அடிமை கொள்ளும் கொடுமையைக் கண்டு மூர்க்கா வேகமாக அக் கொடுமைகளைத் தகர்த்தெறிய முயல்கிறது.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமையென்றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்"

என்கிறார்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர் "எனவும்
"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"

எனவும் அவர் கூறுவது தமிழ் மக்களை நோக்கிக் கட்டளையிடுவதாக அமைந்துள்ளது.

1921 ஆம் ஆண்டு பாரதியார் மறைந்தார். அவர் மறைந்த பின் கடந்த நூறு ஆண்டுகளாக அறிவியல் துறையில் ஏற்பட்ட வியத்தகு முன்னேற்றங்கள், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை பிரமிக்கத்தக்கவை. ஆயின் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அசைக்க முடியாத தன்நம்பிக்கையுடன்,

"காவி நகர புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிலே கேட்பதற்கோர் கருவி செய்வோம்
நடையும் பறப்புணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்"
"மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்
வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்
சந்திரமண்டலத்தியல்பு கண்டு தெளிவோம்
சந்தி தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம்"

என தீர்க்கதரிசனமாக கூறியுள்ளார். குறிப்பாக மனிதன் சந்திரனில் காலடி வைக்க முடியுமென நம்பக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படாத கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சந்திர மண்டலத்தின் இயல்பு கண்டு தெளிவோம் எனக் கூறியுள்ளமை அவரது தீர்க்க தரிசனமே எனலாம்.

**அளவையூர்**
**சைவப்புலவர்,பண்டிதர்,**
**வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை-அலன் கீனன்

(லண்டன்)

**இலங்கையில் குற்றமிழைக்கும் படையினரும், அரசியல்வாதிகளும் என்றும் தண்டிக்கப்படுவதில்லை. இந்த செயற்பாடு மாறும் வரையில், ஜனநாயக ரீதியில் இலங்கை செயற்பட போவதில்லை என பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமை ஆலோசகர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.**



இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலையின் 40 ஆவது நினைவுதினம் இந்த வருடம் அனுஷ்டிக்கப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் 5 வருடங்களை கடந்தும் நீதி கிடைக்காமல் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவை எதற்கும் இலங்கையில் நீதி கிடைக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தினால் வாக்குறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரையில் நீதிபொறி முறைகள் கையாளப்படவில்லை.


நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான விடயங்களுக்கு சர்வதேச ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்புகளினால் வலியுறுத்தப்பட்டாலும் இவற்றை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்பது வெளிப்படையாக தெரிவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்றால் அங்கு விசாரணைக்குழுக்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்பதுடன் அவர்களின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான அனைத்துலக உதவிகளும் பெறப்பட வேண்டும் என்றும் பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமை ஆலோசகர் அலன் கீனன் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மரண அறிவித்தல்

## அமரர். அருள் சின்னையா

## (கணனி மென் வல்லுநர்)



தோற்றம் 08.09.1965 மறைவு 23.08.2023

ஸ்ரீ முருகபவனம் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் Zurich Switzerland ஐ வதிவிடமாகவும் கொண்ட அமரர்.சின்னையா அருள் (கணனி மென்வல்லுநர் Zurich Switzerland) அவர்கள் 23.08.2023 ஆம் திகதி அன்று Switzerland இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்ற திரு.கிட்டினர் சின்னையா (ஓய்வு பெற்ற நகர காவலர்), திருமதி.சின்னையா பொன்னு ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், பேராசிரியை சின்னையா ஜெயலிங்கவதனி (விலங்கியல் துறை, விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), அன்பழகன் (கணனிப் பொறியியலாளர்-துபாய்), அமிர்தசீலன் (பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் வடிவமைப்பு அலகு, நீர்ப்பாசனத் திணைக்களம்-வடமாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி. அ.அனுராதா (ஆசிரியை-துபாய்), திருமதி. அ.டஷினா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம்-வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், தரங்கினி, அபராஜித், ஆதித்தியா, ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஸ்ரீ முருகபவனம் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியில் 12.09.2023 நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் .

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு -
சி.அன்பழகன் - 077 734 6536
சி.அமிர்தசீலன் - 077 161 5252

தகவல்:-
குடும்பத்தினர்.

(C-7226)

## குவியமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைந்து நடாத்தும் கருத்தாய்வு போட்டி-2023

இக் கருத்தாய்வுப் போட்டி. மக்களையும். மக்கள் நிறுவனங்களையும். வளங்களையும் ஒருங்கிணைத்து. சமூகமேம்பாட்டை இலக்காக கொண்டு. தகவல் தளமாக இயங்கும் குவியமும். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைந்து நடாத்தும் கருத்தாய்வுப் போட்டியாகும்.

வளர்ந்து வரும் புதிய தலைமுறையினரது சமூகம் சார்பான படைப்பாக்கத் திறனை ஊக்குவிக்கும் வகையிலும். மாணவர் சமூகத்தின் சமூக ஆய்வுத் திறனை விருத்தி செய்யும் நோக்கிலும் இந்த கருத்தாய்வுப் போட்டி நடாத்தப்படுகின்றது.

இலங்கைவாழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை சமூகத்துக்கு வெளிக்கொணரும் முகமாகவும். அதற்கான தீர்வுகளையும். அவர்களே முன்வைக்கும் நோக்கிலும் இக் கருத்தாய்வுப் போட்டி நடாத்தப்படுகின்றது.

**போட்டிக்கான விபரங்கள்**

1. தரம் 10. தரம் 11 ( கனிஷ்ட பிரிவு). தரம் 12. தரம் 13 (சிரேஷ்ட பிரிவு). பல்கலைக்கழக மாணவர்கள். மாணவ ஆசிரியர்கள். ஆசிரிய மாணவர்கள். பாடசாலை ஆசிரியர்கள் (திறந்த பிரிவு ) ஆகியவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. இலங்கைவாழ் மக்கள் எதிர்நோக்குகின்ற சமூகம் சார் பிரச்சினைகளை அடையாளங் காணுவதோடு அப் பிரச்சினைகளில் இருந்து மீளுவதற்கான முன்மொழிவுகளை முன்வைக்கக் கூடிய கருப்பொருளில் அமைந்த கருத்தாய்வு ஆக்கமாகவும். நல்ல கருத்தாழம் மிக்க ஆக்கமாகவும் எழுதப்பட வேண்டும்..
   - நீங்கள் எழுதும் ஆக்கத்திற்கு பொருத்தமான தலைப்பை நீங்களே இட்டுக் கொள்ள வேண்டும் .
   - உங்களது ஆக்கம் 300 சொற்களுக்கு குறையாமலும் 600 சொற்களுக்கு மேற்படாமலும். தமிழ்மொழியில் எழுதப்பட்ட ஆக்கமாக இருக்க வேண்டும்.
   - நீங்கள் எழுதுகின்ற ஆக்கத்திற்கு பக்க இலக்கம் மிகத் தெளிவாக இடப்பட வேண்டும்.
   - உங்களது ஆக்கங்கள் இன.மத.அரசியல் ரீதியான விரோதங்களை ஏற்படுத்துகின்ற விமர்சன ரீதியான ஆக்கமாக அமைந்தால் அவை நிராகரிக்கப்படும்.
3. உங்களின் ஆக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதிக்கு (07/10/2023) முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு. பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

   **குவியம் இணைப்பாளர்,**
   **இல. 41A, கலாசாலை வீதி,**
   **திருநெல்வேலி.**
   **யாழ்ப்பாணம்.**

   அல்லது

   உங்களின் ஆக்கங்களை Pdf வடிவத்தில் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
   மின்னஞ்சல் முகவரி - Kuviyamnetwork@gmail.com
4. **போட்டியாளர்கள் தங்களின் சுயவிபரத்தை தனியாக எழுதி ஆக்கத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.** அதில் உங்கள் பெயர். நீங்கள் சார்ந்த நிறுவனத்தின் விபரம். பாடசாலையில் கல்வி பயிலும் மாணவராயின் நீங்கள் கல்வி பயிலும் தரம். வெற்றி பெற்றதை அறிவிக்கும் வகையில் தொலைபேசி இலக்கம். மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
5. உங்களின் ஆக்கம் வேறெங்கும் பிரசுரிக்கப்படாத புதிய ஆக்கம் என்பதை தகுதி வாய்ந்த சமூக பிரமுகர் ஒருவரால் அவர்களுடைய பதவியை குறிப்பிடக்கூடிய வங்கயில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (சமூக பிரமுகர்- பாடசாலை அதிபர். நிறுவன தலைவர். கிராம சேவகர்)
6. போட்டி முடிவுகள் குவியம் இணையத்தளத்திலும் (https://www.kuviyam.org/). குவியம் முகநூலிலும் (https://www.facebook.com/groups/147527711594685) பதிவிடப்படுவதுடன். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாத்திரம் நாம் தனிப்பட்ட ரீதியாக தொலைபேசி மூலமும். மின்னஞ்சல் மூலமும் அறியத் தருவோம்.
7. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும். பரிசில்களும் வழங்கப்படும். பரிசில்கள் விபரம்
   1. முதலாம் பரிசு - 7500/=
   2. இரண்டாம் பரிசு - 5000/=
   3. மூன்றாம் பரிசு - 2500/=

   மேலும் 1000/= ரூபாய் பெறுமதியான ஐந்து ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும். (நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது)
8. இதில் சிறந்த கருத்தாய்வு ஆக்கமாக நடுவர்களால் தெரிவு செய்யப்படுபவை அவர்களுடைய பெயரிலேயே எமது குவியம் இணையத்தளத்திலும் (https://www.kuviyam.org/), குவியம் முகநூலிலும் (https://www.facebook.com/groups/147527711594685) பதிவிடப்படும். இதன் மூலம் மாணவர்களின் படைப்பாற்றலுக்கான ஒரு சிறந்த அங்கீகாரம் என்றென்றும் கிடைக்கப்பெறும்.

**மேலதிக தொடர்புகளுக்கு**


**குவியம் தொ.இல- 072 811 1147**
**மின்னஞ்சல் முகவரி** - Kuviyamnetwork@gmail.com
**நன்றி**
**திரு.கோவிந்தப்பிள்ளை சுப்பிரமணியம்**
**(ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்) - 077 351 8308**
**திட்ட இணைப்பாளர், குவியம்**

(16982)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ஜி-20 மாநாட்டை அலங்கரித்த 27 அடி உயர நடராஜர் சிலை



(டில்லி)


புதுடில்லியில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டை அலங்கரித்த 27 அடி உயரமான நடராஜர் சிலை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் வடித்த 27 அடி உயர நடராஜர் சிலை ஜி-20 மாநாடு நடைபெறும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. அஷ்ட தாது எனப்படும் எட்டு உலோகங்களால், காவிரி ஆற்றின் வண்டல் மண் கொண்டு செதுக்கப்பட்டிருப்பது இந்தச் சிலையின் சிறப்பு.

சோழர் காலத்தில் தஞ்சாவூர் பெரிய கோவில் நடராஜர் சிலை வடித்த' குடும்பத்தினர், இதை வடித்துள்ளனர் என்பது மற்றொரு சிறப்பு அம்சம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சுவாமி மலையைச் சேர்ந்த மூன்று சகோதரர்களால் செதுக்கப்பட்ட நடனமாடும் நடராஜர் சிலை ஜி-20 மாநாட்டில், “பாரத் மண்டபம்' என்றழைக்கப்படக்கூடிய அரங்கின் முன்பாக வைக்கப்பட்டது. (நி)

# கதர் அணிந்து காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய உலக தலைவர்கள்






(டில்லி)

ஜி20 மாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தலைவர்கள் ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

அதன்படி உலகத் தலைவர்கள் ராஜ்காட் வந்தனர்.

அவர்களுக்கு கதர் துண்டு அணிவித்து பிரதமர் மோடி வரவேற்றார். பின்னர் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர். (நி)

## உக்ரைனில் இருந்து வெளியேறுமாறு

# ரஷ்யாவிற்கு அழுத்தம் கொடுக்க தவறிய ஜி-20 மாநாடு

## உக்ரைன் கடும் அதிருப்தி

(கீவ்)

ஜி-20 மாநாட்டின் கூட்டறிக்கையில் உக்ரைன் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏமாற்றமளிக்கின்றன என உக்ரைன் தெரிவித்துள்ளது.

ஜி-20 பெருமைப்படுவதற்கு எதுவுமில்லை என தெரிவித்துள்ள உக்ரைனின் வெளிவிவகார பேச்சாளர் பிரகடனத்தில் கடுமையான வார்த்தைகளை சேர்த்துக்கொள்ள முயன்றவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் உக்ரைன் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தால் அது மாநாட்டில் கலந்து கொண்ட [illegible] அறிந்து கொள்ள உதவியிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நிலைமை குறித்து பல்வேறுபட்ட கருத்துக்களும் நிலைப்பாடுகளும் காணப்படுவதாக தெரிவித்துள்ள உக்ரைன் சகல நாடுகளும் சர்வதேச சட்டம் மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டை மதிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனினும் ரஸ்யா உக்ரைனிலிருந்து வெளியேற வேண்டும் என ஜி-20 வேண்டுகோள் விடுக்கவில்லை. (நி)



# மொரோ...

# 2 ஆயிரத்...

(ராபர்)

ஆபிரிக்க நாடான மெ...
பதிவாகியுள்ளதாக சர்வ...



இந்த அனர்த்தத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்துள்ளதாகவும், இதுவரை சுமார் 2,059 பேர் படுகாயமடை
ந்துள்ளதா...
றது.
6.8 ...
பதிவான ...
மராகேஷ்...

## செயற்கை நுண்ண...

# எதிர்காலத்தில் பா...

## கூகுள் இணை நி...

(வோஷிங்டன்)

Artificial intelligence எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் அசுர வளர்ச்சியடைந்து வரும் கால கட்டத்தில் இதைத் தவறாக பயன்படுத்தி வைரஸ் களைக் கூட உருவாக்க முடியும் என எச்சரித்துள்ளார் கூகுள் இணை நிறுவநர்.

ChatGPT இன் வருகைக்குப் பிறகு நாம் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் பல ஏஐ கருவிகளும், மென் பொருட்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இதனால் மனிதர்களின் வாழ்க்கை முறை எளிதாக்கிவிட்டது என நாம் நினைத்தாலும், அவற்றால் எதிர்காலத்தில் மிகப் பெரிய பாதிப்புகள் ஏற்படும் என்

தொழில்நு...
கூறுகின்ற...
இந்நில...
குல த்தை...
கொடூர ...
தொற்று ...
கம்யூட்ட...
ளையும் ...
உருவாக்...
கூகுள் ...
இணை நி...
சுலைமா...
விடுத்துள்...
மேலு...
கிருமி மக்...
போது அ...
எப்படி பல ...
நாம் ...
றோமோ, ...
தொழில்நு...
படுத்தி உ...
மென் பொ...
கருவிகளை...
ப்பாடுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ரோக்கோ எங்கும் மரண ஓலம்! ...ரத்தை தாண்டிய உயிரிழப்புகள்!

...டான மொரோக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இதுவரை 2000 இற்கும் அதிகமான உயிரிழப்புகள் ...தாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







...ந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

6.8 ரிக்டர் அளவில் பதிவான இந்த நிலநடுக்கம் மராகேஷ் உட்பட பல நகரங்களை பாதித்துள்ளது. சில மலைப்பாங்கான பகுதிகளில் முழு கிராமங்களும் தரை மட்டமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற சுற்றுலா உலக பாரம்பரிய நகரமான மராகேஷில் இருந்து 71 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அட்லஸ் மலைப்பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் மொரோக்காவில் ஏற்பட்ட இந்த துயர சம்பவத்திற்கு பல நாட்டு தலைவர்கள் தமது இரங்கல்களை தெரிவித்ததோடு பல தரப்பட்ட உதவிகளை யும்செய்து வருகின்றனர். (நி)

# ...நுண்ணறிவுத் தொழில்நுட்பம் ...தில் பாதிப்பை ஏற்படுத்தும்

## ...ணை நிறுவுநர் எச்சரிக்கை

தொழில்நுட்ப வல்லுநர்கள் கூறுகின்றனர்.


இந்நிலையில், மனித குல த்தை அழிக்கக்கூடிய கொடூர மான வைரஸ் தொற்று நோய் களையும், கம்யூட்டர் வைரஸ்களையும் எஐ பயன்படுத்தி உருவாக்கலாம் என்று கூகுள் டீப் மைண்ட் இணை நிறுவுநர் முஸ்தபா சுலைமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் ஒரு நோய்க் கிருமி மக்களை பாதிக்கும் போது அதைத் தடுப்பதற்கு எப்படி பல கட்டுப்பாடுகளை நாம் மேற் கொள்கிறோமோ, அதேபோல எஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மென் பொருட்கள் மற்றும் கருவிகளை மக்கள் கட்டுப்பாடுடன் பயன்படுத்துவதற்கான வழி முறையை நாம் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கு கட்டுப்பாடுகள் தேவை. உருவாக்கப்பட்ட கருவிகள் மற்றும் மென்பொருட்களை வைத்து எவ்விதமான பரிசோதனைகள் செய்ய வேண்டும் என்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். இதை பயன்படுத்தி தீங்கு விளைவிக்கும் செயலில் ஈடுபட யாரையும் அனுமதிக்க கூடாது.

இதை தொடக்க நிலையிலேயே கட்டுபடுத்தி முன்னெச்சரிக்கையோடு அணுகவேண்டும்" எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (நி)

## நீர்மூழ்கியை அறிமுகப்படுத்தினார் வடகொரிய ஜனாதிபதி



(பியாங்யாங்) வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனதுநாட்டின் புதிய அணுவாயுத நீர் மூழ்கியை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கடற்படை அதிகாரிகளுடன் பாரிய நீர்மூழ்கிக்கு அருகில் காணப்படுவதை காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

வடகொரிய ஜனாதிபதி பல வருடங்களாக இந்தவகையான நீர்மூழ்கியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அவரது அணுவாயுத திட்டத்திற்கு நீர்மூழ்கி மிக முக்கியமானது என்ற கருத்து காணப்பட்டது. வடகொரியா உருவாக்க விரும்பிய ஆயுதங்களின் பட்டியலில் நீண்டகாலமாக அணுவாயுத நீர்மூழ்கி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அலாஸ்காவில் 3,300 அடி ஆழத்தில் தங்கத்தினாலான மர்மப்பொருள் கண்டுபிடிப்பு

## ஆச்சரியத்தில் விஞ்ஞானிகள்

(வோஷிங்டன்)

அலாஸ்கா வளைகுடாவில் 3,300 அடி ஆழத்தில் விஞ்ஞா னிகளை ஆச்சரியத்தில் ஆழ்த் திய "தங்க முட்டை" கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பெருங்கடல் மற்றும் வளிமண்டல ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கடலுக்கு அடியில் ஆய்வு மேற்கொண்டபோது இந்த முட்டை கண்டுபிடிக்கப் பட்டது.முட்டை என சந்தேகிக்கப்படும் இந்த மர்ம பொருள் குறித்து ஆராய் ச்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்ட பரிசோதனையில் இது உயிரியல் தோற்றம் கொண்டது என தெரியவந்துள்ளது.

முட்டை வடிவிலான இந்த பொருள் வெடித்து சிதறியதால், ஏதேனும் உயிரினம் வெளியே வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இருப்பினும், இந்த பொருள் எந்த விலங்கின் முட்டை என்பது யாருக் கும் தெரியாது. இப்படி ஒரு பொருள் கண்டுபிடிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.

இந்த மர்மமான பொருளின் அகலம் 10 செ.மீ. இது உண்மையிலேயே முட்டையாக இருந்தால் கடலுக்கு அடியில் கண்டு பிடிக்கப்படாத உயிரினமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் ஊடகங்களில் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# மூலிகை எண்ணெய்க் குளியல்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பழங்காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் உலக மக்கள் அனைவரும் நலமான வாழ்வு வாழ்ந்து பேரின்பத்தில் திளைத்திருப்பதற்கு மிகச் சிறந்த வாழ்வியல் முறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவை தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருந்த வரையிலும் நலமான வாழ்வு நீர்த்தது. நவீன பண்பாட்டுப் படையெடுப்பால் சித்தர் வாழ்வியல் புறக்கணிக்கப்பட்ட போது நல வாழ்வு கேள்விக்குறியாகிவிட்டது.


தமிழர்களின் உடல் நலத்தினை பாதுகாத்துக் கொண்டிருந்த பல நல்ல பழக்கங்கள் இன்று காணாமல் போய்விட்டன. அவற்றில் எண்ணெயிட்டுக் குளிக்கும் பழக்கமும் ஒன்றாகும். அவற்றிலும் மூலிகை எண்ணெய்க் குளியல் உடல் நலத்தைக் காப்பதில் மேலும் சிறந்ததாகும்.

சித்தர்கள் எண்ணெயிட்டுக் குளிப்பதால் ஏற்படும் உடல் நன்மைகளை வலியுறுத்துகின்றனர் பல நோய் நிலைகளிலும் மூலிகைகள் கலந்த எண்ணெயினைத் தேய்த்துக் குளித்த பின்பு தான் மருந்துகள் கொடுக்க வேண்டுமென தெளிவாக வலியுறுத்துகின்றனர். நோய்களுக்கு தகுந்தவாறு குளியல் முறையும் மாறுபடும்.

எண்ணெயிட்டுக் குளிக்கும் போது உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை எல்லா இடங்களிலும் எண்ணெய் முழுமையாகப் பரவியிருக்க வேண்டும். உடலின் ஒன்பது துளைகளிலும் எண்ணெய் விடல் வேண்டும் கண்களுக்கு 2,3 துளிகளும் மூக்கில் 4 துளிகளும் காதுகளுக்கு 6துளிகளும் விடல் வேண்டும். தலை, கால், பாதம், உள்ளங்கை ஆகிய இடங்களில் எண்ணெயினைத் மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும்.

உடலில் தேய்க்கும் போது சூடு ஏற்படக் கூடாது. உடலில் மிருதுவாக அழுத்தம் கொடுத்தும் விரல் நுனிகளால் தேய்த்தும் தசைப் பகுதியில் இலகுவாகக் தட்டி விட்டும் முதுகுத் தண்டுப் பகுதியில் உள்ளங்கையாலோ பெருவிரலாலோ நீவிவிட்டும் எண்ணெய் தேய்க்க வேண்டும்.

எண்ணெய் இட்டு தேய்த்த பின்பு குறைந்தது 40 நிமிடங்களாவது ஊறவிடல் வேண்டும். அப்போது தான் முழுப்பயனும் கிடைக்கும். எண்ணெயிட்டுக் குளிப்பதற்கு வெந்நீரையே பயன்படுத்தல் வேண்டும். பொதுவாக நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பது நன்று. நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுநெய் மூன்றும் சம அளவு கல்ந்து காய்ச்சியும் பயன்படுத்தலாம். இதற்கு முக்கூட்டு நெய் எனப் பெயர்.



தேங்காய் நெய்யைத் தனியாகப் பயன்படுத்தியும் குளிக்கலாம். நல்லெண்ணெயுடன் மிளகு, நற்சீரகம், பூண்டு, சிறு வெங்காயம் சேர்த்துக் காய்ச்சிப் பயன்படுத்தலாம்.

எண்ணெயில் வெந்த பூண்டையும், வெந்தயத்தையும் சாப்பிட்டு விட்டு மிளகு, சீரகத்தோடு எண்ணெயையும் தலை உச்சியில் தேய்க்கலாம்.

ஆமணக்கெண்ணெயுடன் சிறிய வெங்காயத்தை சேர்த்துக் காய்ச்சிப் பயன்படுத்தலாம்.

வெயில் காலத்திலும் உடல் சூடு கூடியிருக்கும் போது இந்தத் தைலம் சிறந்த பலனைக் கொடுக்கும். குளிர்காலத்தில் தேங்காய் எண்ணெயுடன் மிளகு சேர்த்துக் காய்ச்சிக் குளித்தால் உடல் குளிரைத் தாங்கும் ஆற்றல் பெறும்.முற்றிய செவ்விளநீர் தேங்காயினை நீர் விடாமல் அரைத்துப் பாலெடுத்து அந்தப் பாலினைக் காய்ச்சிக் கொண்டிருந்தால் அது எண்ணெயாக மாறும். இதனைப் பிறந்த குழந்தைகளுக்கு உடலில் பூசிக் குளிப்பாட்டுவதன் மூலமாகத் தோல் தசை வலிமையடையும். அழகான மிருதுவான சருமத்தினையும் கொடுக்கும்.

நன்றாக உருக்கிய பசு நெய்யினை உடல் முழுவதும் பூசிக் குளிப்பதால் உடல் சூட்டினைக் குறைத்து உடல் பலத்தைக் கொடுக்கும். பசுநெய், நல்லெண்ணெய் சமஅளவு கலந்து ஓமத்தை அதனுடன் கலந்து காய்ச்சிக் குளிப்பதால் தலை பாரம், மூக்கடைப்பு, தும்மல் குணமாகும்.

கற்றாழை சாறுடன் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி பயன்படுத்தினால் உடற் சூடு தணிந்து உடல் வலிமை உண்டாகும்.இரவு உறக்கம் வரும். கண்சூடு, எரிச்சல் சிவப்பு மாறும்.

சீரகமும், நல்லெண்ணெய் கலந்து (100 மில்லிக்கு 2 தேக்கரண்டி சீரகம்)காய்ச்சிப் பயன்படுத்தினால் உயர் இரத்த அழுத்தம் சீராகும்.

கறிவேப்பிலை, பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, மருதோன்றி, நெல்லிக்காய், வெந்தயம், கொட்டைக் கரந்தை போன்ற ஏராளமான மூலிகைகளை எண்ணெயுடன் கலந்து காய்ச்சி பயன்படுத்துவதால் பொடுகு நீங்கி முடி பாதுகாப்போடு இருப்பதோடு உடல் உறுப்புக்கள் வலிமை அடையும்.

எண்ணெயிட்டுக் குளிக்கும் போது உடலைத் தூய்மைப்படுத்த சிகைக்காய் பொடியும் பாசிப் பயறும் சம அளவு கலந்து சோறு வடித்த கஞ்சியுடன் நன்கு கலந்து பயன்படுத்தலாம். அல்லது செம்பரத்தை இலைப்பொடி, உலர்ந்த எலுமிச்சைப் பழத் தோல்பொடி, நெல்லி வற்றல்பொடி, மகிழம்பூப் பொடி போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

- உடம்பு முழுக்க பொடி திமிர் தலாக(பொடியை உடம்பில் பூசித் தேய்த்தல்) இலுப்பை பிண்ணாக்கு, உசிலம்பட்டைப் பொடி பயன்படுத்தலாம்.

முடிக்கு பூவந்திக் கொட்டை, பொடுதலை, காக்கணவன் இலை, இலந்தைப் புற்று போன்றவற்றை சிகைக்காயுடன் சேர்த்து பொடித்து பயன்படுத்தும் போது முடி கேடடையாமல் தூய்மையாகும்.

எண்ணெயிட்டுக் குளிக்கும் போது அதிகம் புளிப்புள்ள, பழப்புளி போன்றவற்றை நீக்க வேண்டும். மாங்காயை தவிர்த்து பதிலாக நெல்லிக்காயைப் பயன்படுத்தலாம்.பால், தயிர் நீக்கி மோர் சேர்த்துக் கொள்ளலாம்.எளிதில் செரிக்காத உணவுகளை நீக்க வேண்டும். மது,புகை பயன்படுத்தக் கூடாது.

குளிர்ந்த நீர் பயன்படுத்தலாம் வெந்நீர் குடிக்க வேண்டும், பகல் உறக்கம் ஆகாது, பிஞ்சுக் காய்கள், துவரை, அறக்கீரை, மிளகு, சீரகம், உருக்கிய நெய் பயன்படுத்தலாம்.



உடலில் இயல்பான இயக்கம் சீராவதற்கு எண்ணெய்க் குளியல் உதவுகிறது. உடற்கட்டுக்களிலுள்ள மாசுக்கள் நீங்குகின்றன.

வாரம் இருமுறை எண்ணெயிட்டுக் குளிப்பதால் உடலில் இயல்பான நிலை பாதுகாக்கப்படும். உடலில் கட்டமைப்பும், உடல் இயக்கமும் சீராவதற்கு எண்ணெய் குளியல் அவசியமாகிறது.

தோலிற்கும், தசைக்கும் இரத்த ஓட்டம் சீராவதால் தோல் சுருக்கம் விரைவாக நீங்கித் தோல் பளபளப்புடன் இருக்கும்.தோல் நோய்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும்.தோலிற்கு இயற்கையான கவசமாக இந்த எண்ணெய் விளங்குகின்றது.

பல நோய்களைத் தடுக்கும் ஆற்றல் எண்ணெய்க் குளியலுக்கு உண்டு.

பாதங்களில் செய்யும் எண்ணெய் பூச்சினால் பாதங்களில் உறுதியும் தூக்கம், தெளிவான. கண் பார்வை பெறலாம். பாதத்தில் உணர்ச்சியின்மை, வெடிப்பு, வலி , மரத்துப் போதல் நீங்கும்.

எண்ணெய்க் குளியல் செய்யும் போது உடலில் தேய்க்கும் எண்ணெயிலுள்ள உயிர்ச் சத்துக்கள் இயற்கையான தாவர வேதியற் பொருட்கள் பிற நுண் ஊட்டச்சத்துக்கள் மிகவும் நுட்பமான முறையில் உடலால் உட்கிரகிக்கப்படுகின்றது.

எண்ணெயிலுள்ள நுண் சத்துக்கள் உட்கிரகிப்படுவது போன்றே உடலில் உட்புறமுள்ள கழிவுகளும் வெளியேறுகின்றன.

வாரத்தில் ஒருமுறையாவது கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம் வித்து, கடுக்காய்த்தோல், நெல்லிப் பருப்பு, இலந்தை சம அளவு கலந்து பசுவின் பால், விட்டரைத்து சிறிது சூடு படுத்தி இளஞ்சூட்டுடன் உச்சியிலும், உடம்பிலும் பூசிச் சிறிது ஊறவிட்டு குளித்து வந்தால் சருமத்தை பாதுகாப்பதோடு நோய்கள் உடலை நெருக்காது காத்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவ சப்பர திருவிழா தொடக்கம் பூங்கா வன திருவிழா வரையிலான கால பகுதியில் நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

சப்பற திருவிழாவான நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் இரவு 8 வரையிலும், தேர்த் திருவிழா மற்றும் தீர்த்த திரு விழா அன்று, காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை யிலும், 15 ஆம் திகதி பூங்கா வன திருவிழாவன்று மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையில் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண இரத்த வங்கி யில் சகல வகையான இரத்த த்திற்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் ஆலயத்திற்கு வருகை தருவோர், உயிர் காக்கும் உன்னத பணிக்கு இர த்த தானம் வழங்குமாறு ஏற் பாட்டாளர்கள் அழைத்துள்ள னர்.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர், 077 210 5375 மற்றும் 076 624 2311 ஆகிய தொலைபேசி இலக்க ங்கள் ஊடாக தொடர்பு கொள் ளுமாறும் அறிவித்துள்ள னர். (நி-33)



வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வணிக பீடத்தினால் நடத்தப்பட்ட இளைஞர் தலைமைத்துவ டிப்ளோமா கற்கைகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. (படம்:- கஜிந்தன்)

# ஜப்பான் பிரதமரின் இலங்கை விஜயமும் ரத்து

## இலங்கையை புறக்கணிக்கும் உலக நாடுகள்

(கொழும்பு)

ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவின் இலங்கை விஜயம் இரத்து செய்யப் பட்டுள்ளதாக அரச உள்விவ கார தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்தியாவில் நடை பெறும் ஜி20 உச்சி மாநாட் டில் கலந்து கொள்ளும் நிலையில் ஜப்பான் பிரத மர் ஒரு நாள் பயணமாக இலங்கை வருவதாக முதலில் திட்டமிட்டிருந் தார்.

எனினும் ஜப்பானிய பிரத மரின் இலங்கை விஜயம் இடைநிறுத்தப்பட்டமைக் கான காரணம் இதுவ ரையில் வெளியிடப்பட வில்லை. சமீப காலங்களில் அரச தலைவர் ஒருவர் வர திட்டமிட்டு பின்னர் வராமல் இருப்பது இது இரண்டாவது முறையாகும்.

சீனாவின் சர்ச்சைக்குரிய உளவு கப்பல் இலங்கையில் தரித்து நிற்க அனுமதி வழ ங்கப்பட்டுள்ள நிலையில் அயல் நாடுகளுடனான உற வில் விரிசல் ஏற்பட்டுள் ளது.

இந்நிலையில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ் நாத்சிங் விஜயம் தடைப்பட்ட தையும் அரசியல் மட்டத் தகவல்கள் சுட்டிக்காட்டி யுள்ளன. (நி)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தின் யாழ்ப்பா ணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் (B.A (Hons) in Tamil and Tamil Language Teaching )2023/2024 கற்கைநெறிக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பு பவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இணைய வழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ் ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித் துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப் பாண பிராந்திய நிலையத் துடன் (021 222 3374) தொட ர்பு கொள்ளுமாறும் அறிவித் துள்ளார். (நி)

# இணைய வழியில் பண மோசடி எச்சரிக்கை விடுத்த தபால் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கை தபால் திணைக் களத்தினை போன்ற போலி இணையத்தளத்தை பயன் படுத்தி பணமோசடி நடைபெற் றுள்ளது.

இவ்வாறான மோசடிகளில் ஈடுபடும் நபர்களிடமிருந்து தம்மை பாதுகாத்துக் கொள் ளுமாறு தபால் மா அதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ.எம்.ஆர்.பி. குமார மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

குறித்த பண மோசடிச் சம்ப வம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தபால் திணைக் களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்கு நிகரான இணையத்தளத்தை உரு வாக்கி பொதுமக்களின் வங்கி அட்டைகள் தொடர்பான தகவ ல்களை பெற்று மோசடி செய் யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தபால் திணைக்களம் அதன் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக எந்த வொரு ஒன்லைன் பரிவர்த்த னைக்கும் பயன்படுத்துவ தில்லை என வலியுறுத்தி யுள்ளது.

தபால் திணைக்களத்தின் இணைய முகவரியும் மோச டியான முறையில் பயன்படுத் தப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (நி)

# குற்றவாளிகள் குற்றத்தை விசாரிப்பதால் தீர்வு காண முடியாது-கஜேந்திரகுமார் எம்.பி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்களின் பின்னணியில் ராஜ பக்ஷக்களே உள்ளனர் என்பது தற்போது அம்பலமாகியுள்ளது.

உள்ளக விசாரணைகள் மூலம் தாக்குதலின் பின்னணி யில் உள்ள உண்மைகளை வெளிக்கொணர முடியாது.

குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே பாராளுமன்றத்தில் தெரிவு குழுவொன்றை அமை த்து விசாரணைகளை மேற் கொள்வது என்பது குற்றவாளி ஒருவர் தனது குற்றத்தை தானே விசாரிப்பது போன்றது என்பதுடன் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜே ந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்கு தலின் பின்னணியில் தற் போதைய அரசாங்கமே உள் ளது என வெளிக்கொணரப் பட்டுள்ள விடயங்கள் என்பது எங்களுக்கு ஒன்றும் புதிதல்ல. இது ஒரு ஆச்சரியமான விடயமும் அல்ல.

சனல்-4 காணொளியில் உள்ள விடயங்களை அடிப் படையாகக் கொண்டு தாக்கு தலின்போது இடம்பெற்ற உயி ரிழப்புகள் மற்றும் சேதங்கள் காரணமாக நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள சிங்கள மக் களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

எவ்வாறாயினும் ஆட்சிப் பீடம் ஏறுவதற்கும் ஆட்சி அதி காரங்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் அதனை வெற்றி கொள்வதற்கும் இராணுவ த்தை பயன்படுத்தி இவர்கள் எந்தவொரு உச்சக்கட்டத்துக் கும் செல்வார்கள். தமது மக்க ளையும் இழப்பதற்கும் அவர் கள் தயார்.

இதனை சரியான கோண த்தில் அறிந்துகொள்ள முயற் சித்தால் இந்த தாக்குதலின் பின்னணி குறித்த உண்மை கள் அனைத்தையும் சிங்கள மக்கள் விளங்கிக்கொள்வார் கள்.

மேலும் நாட்டின் உள்ளக விசாரணைகள் மூலம் உயிர் த்த ஞாயிறு தாக்குதலின் பின் னணி மற்றும் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிந்து கொள்ள முடியுமா என்பது கேள்விக் குறியாகும்.

பாராளுமன்றத்தில் அனை த்து சந்தர்ப்பங்களிலும் அரசாங



கத்திற்கு ஆதரவாகவே பெரும் பான்மை காணப்படுகிறது.

இந்த பெரும்பான்மை, அர சாங்க தரப்பினரையே இன்று சனல்-4 நிறுவனம் குற்றவாளி களாக அடையாளப்படுத்தி யுள்ளது.

தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷ தரப்பினரே உள்ள னர் என்பதை இந்த காணொளி மிகத் தெளிவாக குறிப்பிட்டுள் ளது.

இந்நிலையில், குற்றம் சாட் டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே பாராளுமன்றத்தில் தெரிவுக் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள் வது என்பது வேடிக்கையானது.

அதாவது குற்றவாளி ஒரு வர் தன்னுடைய குற்றத் தையே தானே விசாரிப்பது போன்றது. இது போன்ற முட் டாள் தனமான விடயத்துக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என அவர் தெரிவித்தார். (நி)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 600 |
| தக்காளி | 160 | 140 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| கோவா | 150 | 160 | 200 | 200. |
| கரட் | 350 | 300 | 300 | 350 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 100 | 80 | 80 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 350 |
| வெண்டக்காய் | 100 | 80 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 180 | 200 |
| லீக்ஸ் | 160 | 150 | 180 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 130 | 150 |
| கறிமிளகாய் | 200 | 300 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 400 | 350 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 120 |
| தேசிக்காய் | 700 | 800 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 600 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 30 | 60 |
| ஈரப்பலா | 100 | 60 | 100 | 100 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 279



'அதிக தூரம் கரையிலிருந்து வந்து விட்டது என்னமோ உண்மைதான். ஆனால் அப்படியொன்றும் கடல் திடீரென்று பொங்கி விடாது. ஓகோ! அதோ பூங்குழலி வருகிறாளே! கரையேறி அவளைப் பிடித்துக் கொள்ள வேண்டும். பிடித்துக் கொண்டு நயமான வார்த்தைகளினால் மறுபடி கேட்க வேண்டும். அவளும் நம்மைப் பார்த்து விட்டுத்தான் வருகிறாள் போலிருக்கிறது. நாம் இருக்கும் திசையை நோக்கியே வருகிறாள். ஏதோ நம்மைப் பார்த்து சமிக்ஞைகூடச் செய்கிறாளே.

'ஓ! ஓ! இது என்ன? கரையில் குனிந்து அவள் என்ன பார்க்கிறாள். என்னத்தை எடுக்கிறாள்? நம்முடைய இடுப்பில் சுற்றும் சுருள் துணியையல்லவா எடுக்கிறாள்? பெண்ணே! அதை எடுக்காதே! அது என்னுடையது. நாம் சொல்வது அவள் காதில் விழவேயில்லை. இந்தக் கடல் அலைகளின் இரைச்சல்.

'இதோ நம் குரல் அவளுக்குக் கேட்டுவிட்டது. நம்மைப் பார்த்து அவளும் ஏதோ சொல்கிறாள். பூங்குழலி! அது என்னுடையது. எடுக்காதே'

'இந்தா சொன்னால் கேட்கமாட்டாயா? உன் உடைமை போல் கையில் எடுத்துக் கொண்டு நீ பாட்டுக்குப் போகிறாயே நில் நில்'

வந்தியத்தேவன் கரையை நோக்கி ஓட ஆரம்பித்தான். ஒரு தடவை பூங்குழலி அவனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு அவளும் ஓடத் தொடங்கினாள். வீடும் கலங்கரை விளக்கும் இருந்த பக்கத்துக்கு எதிர்பக்கமாகக் காட்டை நோக்கி ஓடினாள்.

'ஆகா! இவள் துஷ்டப் பெண்! துஷ்டப் பெண்ணா? அல்லது வெறும் பைத்தியமா? இந்தப் பைத்தியத்தினிடமிருந்து நமது அரைச் சுருளை எப்படியும் வாங்கியாக வேண்டுமே?'

இரண்டு தடவை கடலில் இடறி விழுந்து ஒருவாய் உப்புத் தண்ணீரும் குடித்துவிட்டு வந்தியத்தேவன் மெதுவாக கரையேறினான். பிறகு அந்தப் பெண்ணைத் தொடர்ந்து ஓடினான். ஓட ஓட, அவளுடைய ஓட்டத்தின் வேகம் அதிகமாயிற்று. சற்றுத் தூரத்தில் ஐம்பது அறுபது மான்களின் கூட்டம் ஒன்று ஓடியது.

'மான்கள் மிரண்டு, பாய்ந்து ஓடுவது, தாவித் தாவிக் குதித்து ஓடுவது என்ன அழகான காட்சி! ஏன்? இதோ இந்தப் பெண் குதித்துக் குதித்து ஓடுகிறாளே? இதுவும் அந்த மான்களின் ஓட்டத்தைவிட அழகில் குறைவாயில்லை. இம்மாதிரி இயற்கையாகவும் யதேச்சையாகவும் வாழும் பெண்களின் அழகே அழகுதான். ஆனால் இதையெல்லாம் அவளிடம் சொல்லக் கூடாது. சொன்னால் காரியம் கெட்டுப் போய் விடும். பெரியவர்தான் எச்சரித்திருக்கிறாரே. இருந்தாலும் இவள் எதற்காக இப்படி வீம்பு பிடித்துக் கொண்டு ஓடுகிறாள். காட்டில் புகுந்துவிட்டால் அப்புறம் அவளைக் கண்டுபிடிப்பது எப்படி? இதோ காட்டிற்குள் புகுந்தே விட்டாள். காரியும் கெட்டுக் குட்டிச்சுவராகி விட்டது. நம்மைப் போன்ற மௌடீகன் உலகிலேயே வேறு யாரும் இருக்க முடியாது. குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை திரும்பி வருமா?'

வந்தியத்தேவனும் சிறிது நேரத்தில் காட்டிற்குள் புகுந்தான். அங்குமிங்கும் அலைந்தான். அவசரத்தினாலும் பரபரப்பினாலும் செடிகளைச் சரியாக விலக்கி விட்டுக் கொண்டு நடக்காமல் உடம்பெல்லாம் முட்களால் கீறிக் கொண்டான். "பூங்குழலி பூங்குழலி!" என்று கூச்சலிட்டான். பிறகு, "மரமே! பூங்குழலியைக் கண்டாயோ?" "காக்காய்! பூங்குழலியைக் கண்டாயோ?" என்றெல்லாம் கேட்க ஆரம்பித்தான்.

'இது எது? நமக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே' என்று அவன் நினைக்கத் தொடங்கிய சமயத்தில், திடீரென்று மரத்தின் மேலிருந்து ஏதோ விழுந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வாலைக் கொஞ்சம் சுருட்டிக்கோ

ஒரு அழகான சின்ன வீடு. அதுல அம்மா, அப்பா , குழந்தைகள் என ஹாப்பியா இருந்தாங்க. அவங்க வீட்ல பூனை, நாய், கிளி என வீட்டுப் பிராணிகளை வளர்த்து வந்தாங்க. அவங்க வீட்ல ஒரு குட்டிப் பப்பி இருந்துச்சு. அதோட பேரு கிட்டோ. ரொம்ப சுட்டித்தனம் கொண்ட குட்டி நாய் அது. அது பிறந்து 3 மாசம் தான் ஆகுது. பாக்குறதுக்கு கொஞ்சம் புசு புசுன்னு இருக்கும். நல்ல வெள்ளை கலருல அங்க அங்க கொஞ்சம் கருப்பு கலர் புள்ளி இருக்கும்.



நீங்க 101 டால்மேஷன் படம் பார்த்திருக்கீங்களா? அதுல வர்ற குட்டிப் பப்பி மாதிரி நினைச்சுக்கோங்க. குட்டி கிட்டோ எப்போவும் துருதுருன்னு இருக்கும். எதையாவது செஞ்சு எதுலையாச்சும் மாட்டிக்கும். அதுலயும் கிட்டோக்கு கூடைகள் என்றால் ரொம்ப பிடிக்கும். அதுல என்ன இருக்குன்னு தெரிஞ்சிக்க ரொம்ப ஆர்வமா இருக்கும். கூடைய பாத்துட்டா அத விடவே விடாது.

இப்போ ஒரு கூடையை பாத்துருச்சுனு வச்சிக்கோங்க அது உள்ள போய் குதிச்சு விளையாடும். அந்த கூடைக்குள்ள உருண்டு விளையாடிட்டே இருக்கும். அத விட்டு வெளியவே வராது. அந்த கூடைக்குள்ள எதுவும் இல்லனா கிட்டோ உள்ள போய் மண்டையில் மாட்டிகிட்டு அங்கேயும் இங்கயும் நடக்கும்.

வீட்டுக்கு புதுசா யாராச்சும் வராங்க அப்படினா, அச்சோ இந்த வீட்ல என்னடா கூடை நடக்குதுன்னு பதறி பாப்பாங்க. நம்ம கிட்டோ உள்ள இருப்பாரு. அவருதான் ரொம்ப குட்டி ஆச்சே, உள்ள இருக்குறது வெளியவும் தெரியாது. அந்த அளவுக்கு கிட்டோக்கு கூடைகள் மீது ஆர்வம் அதிகம்.

ஒருநாள் கிட்டோ இப்படி விளையாடிட்டு இருக்கும்போது அங்க இருந்த ஒரு பெரிய கூடையை பார்த்தது. "ஆஹா இவ்ளோ பெரிய கூடையா , எப்படி என் கண்ணில படாம இருந்துச்சு" என நினைத்து கொண்டு தலையை உள்ளே விட்டது.

கூடை பெருசா இருந்ததால கொஞ்சம் இருட்டா தெரிஞ்சுது. உள்ள என்ன இருக்குதுனு நம்ம கிட்டோவால பார்க்க முடியல. உடனே முன்னங்கால்களையும் உள்ளே விட்டு பார்த்தது. நம்ம கிட்டோ சட்டுன்னு பயந்துருச்சு.

தீடிரென ஏதோ சீறுற மாதிரி சத்தம் கேட்டுச்சு. ஏதோ கிட்டோ மூஞ்சில குத்தின மாதிரி ஈரமா இருந்துச்சு. கிட்டோ முகத்துல ஏதோ கூர்மையான பொருளை வச்சு கீறின மாதிரி இருந்துச்சு. பாவம் நம்ம கிட்டோ சட்டுன்னு கூடையை விட்டு வெளிய குதிச்சது. பக்கத்துல இருந்த தண்ணி பௌல்ல தலையை விட்டுச்சு.

"அறிவிருக்கா குட்டி" பெரிய சத்தத்துடன் கிட்டோவோட அம்மா வந்துச்சு. "அந்த பாஸ்கெட்ல தான் அந்த குண்டு பிளாஸ்ஸி வாழ்றாள். அவளோட பூனைக் குட்டிகளை அங்கதான பத்திரமா பாத்துக்குறா. அது உள்ள உன்ன யாரு தலையை விட சொன்னது" செம திட்டு நம்ம கிட்டோக்கு அவங்க அம்மாகிட்ட இருந்து.

அதுக்கு அப்புறம் நம்ம கிட்டோ எந்த கூடை பக்கத்துலயும் போறது இல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமை தான் துயரத்தின் தாய்.

~ இங்கர்சால்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சனாதன தர்மம் திமுகவை சரிக்குமா?

சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் ஸ்டாலினின் மகன் உதயநிதி ஸ்டாலின் கூறிய விவகாரம் தமிழகம் முழுவதையும் பரபரப்பாக்கியுள்ளது.

சனாதன தர்மத்தை ஒழிப்பதற்காகவே திராவிட முன்னேற்றக்கழகம் உருவாக்கப்பட்டது எனக் கூறிய உதயநிதி ஸ்டாலின்; சனாதன தர்மத்தை ஒழிக்கும்வரை ஓயப் போவதில்லை என்றும் சபதம் செய்துள்ளார்.

சட்டசபை உறுப்பினராக, தமிழக மாநில அமைச்சராக, தமிழக முதலமைச்சரின் மகனாக, கலைஞர் கருணாநிதியின் பேரனாக இருக்கக்கூடிய உதயநிதி ஸ்டாலின் எதற்காக சனாதன தர்மத்தை கையிலெடுத்து அதனைக் கீழ்த்தரமாக விமர்சித்தார் என்பது புரியவில்லை.

சிலவேளை தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சியின் எழுச்சியும் அண்ணாமலையின் ஓயாத முயற்சியும் உதயநிதி ஸ்டாலினை கலங்க வைத்திருக்கலாம்.

அந்தக் கலக்கம் காரணமாக அவர் சனாதன தர்மத்தை விமர்சிக்கத் தலைப்பட்டார் என்றோ அல்லது அறுகின்ற நாளைக்கு எழுகின்ற அகந்தை போல, மகிழ்ச்சி மேலீட்டால் சனாதன தர்மம் பற்றித் தன் பாட்டில் பேசுகின்ற சூழ்நிலை ஏற்பட்டதோ என்று தெரியவில்லை.

ஆனால் சனாதன தர்மத்தை இழிவுபடுத்தும் வகையில் உதயநிதி ஸ்டாலின் கூறிய கருத்துக்கள் தமிழகத்தில் மிகப்பெரும் சர்ச்சையை, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், இந்து சமயத்தை சனாதன தர்மம் என்று போற்றுவர்.

சனாதன தர்மம் என்பது அறத்துடன் கூடிய வாழ்வைச் சுட்டி நிற்பது.

தவிர, நிலையான தர்மம் என்பதையும் அது குறித்துரைக்கிறது.

இருந்தும் சனாதன தர்மத்தின் பொருள் உணராத உதயநிதி ஸ்டாலின்; பிறப்பால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பதை சனாதன தர்மம் வலியுறுத்துவதாக விளக்கம் கொடுக்கின்றார்.

அதாவது சாதியக் கட்டமைப்பை சனாதன தர்மம் நிலைநிறுத்துவதாக அவரின் பொருள்கோடல் அமைகிறது.

இங்குதான் மிகப்பெரிய தவறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இழைத்துள்ளார்.

அதாவது சனாதன தர்மம் என்பது தொன்மை மிகுந்த இந்து சமயத்தை சுட்டுவது.

அது இன்றோ அல்லது நேற்றோ அறிமுகப்படுத்தப்பட்டதொன்றல்ல.

நிலைமை இதுவாக இருக்கையில், சனாதன தர்மத்தை பிழையாக விளங்கிக் கொண்டு அதனை விமர்சிக்க முற்பட்டமை உதயநிதி ஸ்டாலின் அனுபவக் குறைவை, முதிர்ச்சியில்லாத அறிவை வெளிப்படுத்துவதாகவே கருத முடியும்.

ஆம், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தை எடுத்தியம்புகின்ற சனாதன தர்மம் ஒருபோதும் மனிதர்களைப் பிறப்பால் பேதப்படுத்தவில்லை.

மாறாக இந்து சமயத்தில் இருக்கக்கூடிய கடமைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, தவறான கருத்தை சிலர் முன்வைத்திருக்கலாம்.

அதற்காக, உலகம் முழுவதும் பரந்தும் விரிந்தும் இருக்கக்கூடிய சனாதன தர்மத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தரக் குறைவாகக் கருத்துரைத்தமையானது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சரிவுக்கான கால்கோள் என்று கணிப்பதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

## தமது பொக்கட்டுக்களை நிரப்பவே ஹெகலிய போலி மருந்துகளை இறுக்குமதி செய்கிறார்

**செல்வம் எம்.பி ஆதங்கம்**

(மன்னார்)

மக்களுடைய வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டிருக்கும் தற்போதைய சுகாதார அமைச்சர் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டு இளமையான புதிய ஒருவரை சுகாதார அமைச்சராக நியமிக்கும் பட்சத்திலேயே இந்த பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு கிடைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்ற மாத்திரைகள் போலியானதாக உள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகிறது.

சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல போலியான மருந்துகள் இறக்குமதி செய்து அந்த பணத்தால் தனது பொக்கட்டுக்களை நிரப்பி உள்ளார்.

அதனடிப்படையில் ஒட்டுமொத்த நாடுகளையும் சுகாதார அமைச்சர் ஏமாற்றியது மட்டுமின்றி இதற்கு ஆதரவாக வாக்களித்தவர்களையும் ஒட்டுமொத்த நாட்டையும் மக்களையும் ஏமாற்றி உள்ளார்.

இந்த பிரச்சனையில் இருந்து மீண்டு எழ வேண்டுமாக இருந்தால் சுகாதார அமைச்சர் மாற்றப்பட வேண்டும்.

அவர் வெற்றி பெற்றுவிட்டார் என்ற எண்ணத்துடன் இருக்க முடியாது. அரசை காப்பாற்றுவதற்காக அவரை வெற்றி பெற செய்துள்ளனர். அவர் மாற்றப்பட வேண்டும். அல்லது அவர் ராஜினாமா செய்ய வேண்டும்.

மக்களினுடைய வாழ்வு பிரச்சினையாக அமைந்துள்ளது. உயிர் சம்பந்தமான பிரச்சினை. இதில் விளையாட முடியாது. எனவே ஜனாதிபதி இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வாறானவர்களை வெளியேற்றி சுகாதார துறைக்கு நல்ல இளமையானவர்களை அமைச்சராக நியமித்து ஏற்பட்டுள்ள பிரச்சினையை மீட்டெடுக்க துரித நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார். (7)

## கச்சா எண்ணெய் விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

கடந்த சில தினங்களை விட உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் சிறிது உயர்வு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, பிரண்ட் கச்சா எண்ணெய் பேரல் விலை 90.65 டொலராக உயர்ந்துள்ளது.

WTI கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 87.51 ஆக இருந்தது. இது 0.74% அதிகரித்துள்ளது. (7)

## உரப்பற்றாக்குறையை தவிர்க்க இறக்குமதியை அதிகரிக்கவும்

**விவசாய அமைச்சு**

(கொழும்பு)

உரங்களை இறக்குமதி செய்து பற்றாக்குறையின்றி போதுமான தொகையினை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

அனைத்து அங்கீகாரம் பெற்ற உர இறக்குமதியாளர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும். பெரும் போகத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உர மானியத்துக்கு பதிலாக நிதி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு அவற்றை மானியமாக வழங்கும் செயற்பாட்டிலிருந்து தாம் விலகியுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. (7)

## வவுனியா பல்கலையில் இலவச கருத்தரங்கு

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு, நாளை மறுதினம் பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியாப் பல்கலைக் கழகத்தில் பிற்பகல் 12.30 தொடக்கம் மாலை 05.30 வரை பல்கலைக்கழகத்தின் சூசைரட்ணம் கட்டடத்தொகுதியில் இடம் பெறவுள்ளது.

2022ம்ஆண்டுக.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்திருக்கும் அனைத்து பாட மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்தல், இணைய வழிப் பதிவு மற்றும் பல்கலைக் கழக பாடத் தெரிவு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டும் நோக்கில் குறித்த கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளத்தில் மின்சாரம் தடைப்படும்.

## போக்குவரத்துக் குறைபாட்டை முறையிட விசேட இலக்கம்

**இலங்கை போக்குவரத்து சபை**

(கொழும்பு)

போக்குவரத்து அமைப்பில் நிலவும் பிரச்சினைகளை தெரிவிப்பதற்காக விசேட தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

1958 என்ற எண்ணுக்கு அழைப்பதன் மூலம் பொதுமக்கள் பிரச்சினைகள், விசாரணைகள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிக்கலாம் என்று அதன் செயல்வணிக மேலாளர் எரந்த தில்ஹான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாத்துறையைமையப்படுத்தி போக்குவரத்து சேவையை ஆரம்பிக்க இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உணவு மற்றும் பானம் உள்ளிட்ட சொகுசு வசதிகளை உள்ளடக்கியதாக 17 இரண்டு தட்டு பஸ்கள் உருவாக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

பெந்தோட்டை, மிரிஸ்ஸ, எல்ல-வெல்லவாய, பொலன்னறுவை மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட முக்கிய சுற்றுலா இடங்களை இலக்காகக் கொண்டு இந்த பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் இலங்கை போக்குவரத்து சபையின் செயல் வணிக மேலாளர் எரந்த தில்ஹான் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## சுற்றுலா விசாவில் வேலைதேடி வெளிநாடுகளுக்குச் செல்லாதீர்கள்

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**

(கொழும்பு)

சுற்றுலா வீசாவின் மூலம் வேலை தேடி வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாம்என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

சுற்றுலா விசாவை பயன்படுத்தி வேலைக்காக செல்வது சட்டவிரோதமானது என்றும் இதுபற்றி எந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தொழிலுக்காக செல்வோர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மை பதிவு செய்ததன் பின்னர் வெளிநாடுகளுக்கு செல்வது கட்டாயமானதாகும்.

ஓமானில் தொழிலுக்காக சென்று மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்பட்ட ஒருவர் ஏழு இலட்சம் ரூபா செலவில் சுற்றுலா விசாவில் அங்கு சென்றிருந்தமையும் தெரிய வந்துள்ளதாக பணியகம் அறிவித்துள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

29

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஆனால் ஒத்திவைப்பு காலத்தில் உங்கள் கடனில் வட்டி தொடர்ந்து சேரலாம். இது நீண்ட காலத்திற்கு நீங்கள் அதிக பணம் செலுத்த வேண்டியிருக்கும். உதாரணமாக அண்மையில் சீனாவின் எக்சிம் வங்கி இலங்கைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கடன்களை மீளப் பெறுவதை இரண்டு வருட காலத்திற்கு ஒத்திவைப்பதாக தெரிவித்திருந்தது.

### கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களின் அம்சங்கள்

கடனின் வகை மற்றும் அளவு, கடனாளி மற்றும் கடன் வழங்குநர் நிதி நிலைமை மற்றும் பேச்சுவார்த்தை செயல்முறை ஆகியவற்றைப் பொறுத்து கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் மாறுபடும். இருப்பினும் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களின் சில பொதுவான அம்சங்கள் கடனாளி மற்றும் கடன் வழங்குநர் நலன்களுக்கு இடையேயான வர்த்தகம் (அதாவது குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் நீண்ட திருப்பிச் செலுத்தும் காலம் போன்ற அம்சங்கள்) என்பவற்றை குறிப்பிடலாம்.

இதற்கு, குறிப்பாக கடன் நிறுத்திவைப்பு சிக்கல்கள் அல்லது வழக்கு அபாயங்களைத் தவிர்க்க பெரும்பாலும் அனைத்து அல்லது பெரும்பான்மையான கடன் வழங்குநர்களிடமிருந்தும் ஒப்புதல் தேவைப்படுகிறது. மேலும், கடன் வழங்குநர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் உட்பிரிவுகள் உள்ளடக்கப்படும். இந்த உட்பிரிவுகள் கடனாளியை மற்றைய கடன் வழங்குநர்களுக்கு சாதகமாக வைப்பதிலிருந்தும் பிற கடமைகளைத் தவறவிடுவதிலிருந்தும் அல்லது பணம் செலுத்துவதில் தாமதம் செய்வதிலிருந்தும் தடுக்கிறது.

கூடுதலாக ஒப்பந்தத்திற்கு இணங்க கடனாளியை ஊக்குவிக்கும் உட்பிரிவுகள் இருக்கலாம். அதாவது சலுகைக் காலங்கள், தள்ளுபடிகள், உடன்படிக்கைகள், சில நெகிழ்வுத்தன்மை, மன்னிப்பு அல்லது கடன் மறுசீரமைப்புக்கான நிபந்தனைகளை அனுமதிக்கின்றன.

### கடன் மறுசீரமைப்பின் நன்மைகள்

கடன் மறுசீரமைப்பு கடனாளி மற்றும் கடன் வழங்குநர் இருவருக்குமே பல நன்மைகளைக் கொண்டு வரலாம். கடனாளியின் கடனைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் பணப்புழக்கம் ஆகியவற்றை மேம்படுத்துதல், அவர்களின் கடன் குறைத்தல் மற்றும் அவர்களின் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை எளிதாக்குதல் போன்றவற்றை கடனாளிக்கு ஏற்படும் நன்மைகளாகக் குறிப்பிடலாம்.

கடனாளி திவால் நிலையை (bankruptcy) அடைந்தால் அதனால் ஏற்படும் வழக்குச் செலவு (சட்டக் கட்டணம்), நற்பெயர் சேதம், சொத்தை இழத்தல் (சொத்து கலைப்பு) அல்லது அதன் மீதுள்ள கட்டுப்பாட்டை இழத்தல் போன்ற இயல்பு நிலைகளால் விளைவுகளைத் தவிர்க்கவும் அல்லது குறைக்கவும் இது உதவும். மேலும், இது ஒரு கடனின் முழுமையான தள்ளுபடி அல்லது நீடித்த சட்ட செயல்முறையைத் தவிர்ப்பதன் மூலம் கடன் வழங்குநரின் லாபத்தை பராமரிக்க அல்லது மேம்படுத்த உதவும்.

இறுதியாக, கடன் மறுசீரமைப்பு நல்லெண்ணம், நெகிழ்வுத்தன்மை மற்றும் பரஸ்பர மரியாதையை வெளிப்படுத்துவதன் மூலம் கடனாளிக்கும் கடன் வழங்குநருக்கும் இடையே கூட்டுறவு மற்றும் ஆக்கபூர்வமான உறவை வளர்க்க முடியும்.

### கடன் மறுசீரமைப்பு சவால்கள்

கடன் மறுசீரமைப்பு என்பது பல தரப்பினர், ஆர்வங்கள் மற்றும் சிக்கல்களை உள்ளடக்கிய ஒரு சிக்கலான மற்றும் நேரத்தை எடுத்துக் கொள்ளும் செயல்முறையாக இருக்கும். இது குறைந்த வட்டி வருமானம், அதிக நிர்வாகச் செலவுகள் அல்லது நாணய ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் பாதிப்பு போன்ற சில செலவுகள் மற்றும் இடர்களை கடனளிப்பவருக்கு ஏற்படுத்தலாம்.

மேலும், கடன் மறுசீரமைப்பு கடனாளி மீது சில எதிர்மறை தாக்கங்களை ஏற்படுத்தலாம். இந்த எதிர்மறையான தாக்கங்களில் சில குறைந்த கடன் மதிப்பீடு (lower credit rating), கடன் வாங்க அதிக செலவு (higher borrowing costs) அல்லது உரிமையைக் குறைத்தல் (dilution of ownership) ஆகியவை அடங்கும்.

### கடன் மறுசீரமைப்புக்கான சிறந்த நடைமுறைகள்

ஒரு வெற்றிகரமான மற்றும் நிலையான கடன் மறுசீரமைப்பை அடைவதற்கு, கடனாளி மற்றும் கடன் வழங்குநர் இருவரும் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் தொடர்பு கொண்டு நம்பிக்கையையும் புரிதலையும் உருவாக்க நல்ல நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். வழக்கறிஞர்கள், கணக்காளர்கள் அல்லது ஆலோசகர்கள் போன்ற நிபுணர்களிடமிருந்து தொழில்முறை ஆலோசனையைப் பெறுவதும் அவசியம். இது சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யும். அத்துடன் கடன் மறுசீரமைப்பு விருப்பங்களின் சாத்தியம் மற்றும் தாக்கங்களை மதிப்பீடு செய்யவும் உதவும். மேலும், தேவைக்கேற்ப சரிசெய்தல் அல்லது திருத்தங்களைச் செய்வதற்கு ஒப்பந்தத்தின் அமுலாக்கத்தைக் கண்காணித்து மதிப்பாய்வு செய்வது முக்கியம்.

### வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, கடந்த டிசெம்பர் மாத நிலவரப்படி, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சுமை 52 பில்லியன் டொலர்களுக்கு மேல் உள்ளது. அதில், கிட்டத்தட்ட 40 சதவீதம் நிதி நிறுவனங்கள் உட்பட தனியாரிடம் கடன்பட்டுள்ளது. மீதமுள்ளவை சீனா, ஜப்பான், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்தியா ஆகியவற்றிடம் கடன்பட்டுள்ளது.

இலங்கை தனது கடன்களை மீளச் செலுத்தவோ அவற்றுக்கு வட்டி கட்டவோ முடியாது என்று 2022 ஏப்ரல் மாதம் அறிவித்தது. அதனைத் தொடர்ந்து 2022 ஏப் ரல் 18 ஆம் திகதி 2 பிணை முறிகளுக்கு கட்ட வேண்டிய வட்டித் தொகையாகிய 78 மில்லியன் அமெரிக்க டொலர்களை கட்டத் தவறியது. அதன்பின்னும் இதுவரை எந்தக் கொடுப்பனவும் செய்யப்படவில்லை.

இதன் மூலம் இந்த நூற்றாண்டில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனது கடனைக் கட்டத் தவறிய முதலாவது நாடாக இலங்கை வந்துள்ளது. இன்று இலங்கை தன்னுடைய பிணைமுறிக் கடன்களை மறுசீரமைக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பை இலங்கை எவ்வாறு செய்து முடிக்கப் போகிறது என்பதே இன்றைய கேள்வி. இது பற்றி பல கட்டுரைகள், நேர்காணல்கள் என்று வரத் தொடங்கி விட்டன.

"நாடுகளின் பிணைமுறிக் கடன்களின் ஆபத்தையும் அவற்றின் மறுசீரமைப்பையும் விளங்கிக் கொள்ளலும் கையாளலும்" என்ற தலைப்பில் புளோரன்ஸ் வங்கி மற்றும் நிதித்துறை கற்கை நிறுவனத்தினால் (Florence School of Banking and Finance) 2018 ஏப்ரல் 24 இல் வங்கியாளர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் லீ புக்ஹைட் (Lee C. Buchheit) வழங்கிய உரையின் தமிழாக்கம் நிமிர்வு என்னும் இணையத்தில் வந்திருந்தது. அதன் ஒரு பகுதி தொகுக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது.

லீ புக்ஹைட் (Lee C. Buchheit) என்பவரின் கூற்றுப்படி இந்த 21 ஆம் நூற்றாண்டில் கடன் வாங்கும் எந்த ஒரு நாடும் அக்கடனை திருப்பி செலுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் கடன் வாங்குவதில்லை என்கிறார்.

கடனை திருப்பி செலுத்த வேண்டும் என்ற எண்ணம் வளர்ச்சியடைந்த நாடாக இருந்தாலும் சரி அல்லது வளர்ந்து வரும் நாடாக இருந்தாலும் சரி இது பொருந்தும். இங்கு, திருப்பிச் செலுத்துதல் என்பது, ஒரு நாடு அப்போது தனக்கு இருக்கும் வளங்களை உபயோகித்து தன்னுடைய அந்தக் கடன் பொறுப்பை விட்டு வெளியேறுதல் என்று தான் அர்த்தப்படும்.

ஆனால் 21 ஆம் நூற்றாண்டில் எல்லா நாடுகளும் கடன் வாங்கும் பொழுது, அந்தக் கடனை கட்ட வேண்டிய காலம் முதிர்வடையும் பொழுது வேறு இடத்திலிருந்து இன்னுமொரு கடனை வாங்கி முதல் வாங்கிய கடனை கட்ட முடியும் என்ற நம்பிக்கையிலேயே கடன் வாங்குகின்றன. அப்படி வாங்கிய புதிய கடனை கட்ட வேண்டிய காலம் முதிர்வடையும் போது மேலும் இன்னுமொரு கடனை வாங்கி அதனை கட்ட முடியும் என்று நம்புகின்றன. இவ்வாறாக இது நிரந்தரமாக முடிவில்லாமல் தொடர்கிறது.

இந்தக் காரணத்திற்காக லீ புக்ஹைட் இதை மறுகடனெடுத்தல் அனுமானம் (refinancing assumption) என்று அழைக்கிறார். நாடுகளின் இந்த ஓயாத கடன் பெருக்கத்தினாலேயே அவற்றின் பொருளாதாரத்தில் பிணைமுறிக் கடன்களின் பங்கு பொதுவாக வளர்ச்சியடைகின்றது. இந்தப் பங்கு மிகவும் அரிதாகவே குறைவடைகின்றது.

கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உள்ள விகிதம் (debt to GDP ratio) என்பதைப் பார்க்கும் போது அது கீழே போகலாம். ஏனெனில், GDP உயரலாம். ஆனால் பிணைமுறிக் கடன்களின் பங்கு அரிதாகவே குறைகின்றது. பழைய காலத்தில் இது இவ்வாறாக இருந்ததில்லை.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்...

ளருக்கு வழங்கப்படும் வகையில் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்க தயார் என ஒன்றியத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஒரு பாடசாலையின் வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை நீதிமன்ற உத்தரவால் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இது அந்த வரம்பை மீறும் மாணவர்களை அனுமதிக்க அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கிறது.

நீதிமன்ற உத்தரவு 2016ஆம் ஆண்டு முதல் ஒரு வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகபட்சமாக 35 ஆக மட்டுப்படுத்தியுள்ளதாகவும், புதிய அமைச்சரவை பத்திரம் நீதிமன்ற உத்தரவை மீறுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்மூலம் பிரபல பாடசாலைகளின் வகுப்பறைகளில் கடுமையான நெரிசல் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## மின் கட்டணத்தை...

சங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் இது தொடர்பாக எந்த கோரிக்கையும் இதுவரை வரவில்லை என்று தலைவர் தெரிவித்தார்.

கடந்த ஜுலை 3ஆம் திகதி 14.2 சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்பட்டு அதற்கு முன் 70 சதவீதம் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்படுமாயின் அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும், வருடத்திற்கு இரண்டு முறை மாத்திரமே மின்சாரக் கட்டணத்தை திருத்த முடியும் எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (7)


மெகா பவர்
திகதி 10/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1581
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
W 06 25 37 49 62
ஜெகஸ் Double Chance 77521
தொலைபேசி 0112-470462, 0114-607000
இணையம் www.nlb.lk

தன நிதானய
திகதி - 2023.09.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1263
X 46 58 74 76 X
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 21857
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

லக்கி 7 Lucky லக்கி
திகதி 10.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0059
L7 இலக்கம் 1 7
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 3 5 3 6 0 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3475
சீட்டிழுப்பு திகதி 10.09.2023
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 10 27 56 65
N
27634
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 542
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 08 32 35 52
மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/09/10
சீட்டிழுப்பு இலக்கம் 5233
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 9 7 5 5 8
தேசிய லொத்தர் சபை


## ஈஸ்டர்...

இதன்படி, தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கைகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர், அந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் சனல் 4 விடுத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். (7)

## வாள்வெட்டு...

போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் தாயும் மகளும் இருந்த வேளை வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் இருவர் மீதும் வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் தனிப்பட்ட பகை காரணமாகவே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (7)

## விசாரணை...

என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ந)

## பேருந்து...

நேற்று இரவு 8 மணியளவில் கோப்பாய் இராச பாதை சந்திக்கு அண்மையாக இடம்பெற்றது.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை சேர்ந்தவரும் கோப்பாயில் மோட்டார் திருத்தகம் நடத்துபவருமான ரொபின் (வயது-44) என்பவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து அதிசொகுசு பேருந்தின் சாரதி தப்பித்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், விபத்து இடம்பெற்ற இடத்தில் கூடிய மக்களை அப்புறப்படுத்தி விட்டு, உயிரிழந்தவரின் சடலத்தை பொலிஸ் முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் கருத்துரைத்த பொலிஸார்,

"விபத்தை ஏற்படுத்திய அதி சொகுசு பேருந்து கொழும்பு - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடுகின்றது. அதில் பயணிகள் இருந்தனர்.

விபத்தையடுத்து ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் பேருந்தை தாக்கியதுடன், பொலிஸாரையும் தாக்கினர். அதனால் அப்பகுதியில் கூடியவர்களை அகற்றினோம்" என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (7,33)

## தற்காலிக...

அந்த ஊழியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பான யோசனையை பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளார்.

இது தொடர்பான பிரேரணைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார். (7)

## தையிட்டியில்...

மிப்பதற்கு நில அளவைத் திணைக்களமும் அரச அதிகாரிகளும் வருகை தர இருப்பதாக நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அள வீட்டுப் பணிகள் இடம்பெறுமாக இருந்தால் நிரந்தரமாகவே அந்தக் காணிகளை சுவீகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, சட்ட விரோத விகாரைக் கட்டுமானத்தை எதிர்த்தும் நிலஅளவைப் பணிகளை எதிர்த்தும் எதிர்வரும் நாளை போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவரும் தயாராகுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (7)

## நாயன்...

வருகின்றது.

இதேவேளை வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் சென்ற கார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


# வறட்சியால் 63 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் அழிவு

வறட்சியால் சிறுபோகத்தில் 63 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்கள் அழிவடைந்துள்ளன என விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிக்கை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் விவசாய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது என சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

வறட்சியால் நாட்டில் 64 ஆயிரத்து 342 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது. (7)


நாகபூசணி அம்மன் அருளுடன்
அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது
அபிவிருத்தி லொத்தர் சபையின் 09.09.2023
அதகோடிபதி லொத்தர் சீட்டிழுப்பில் யாழ்.முகவர்
கனகலிங்கம் திலகவதியூடாக
2 இலட்சம் ரூபாய்
வெல்லப்பட்டுள்ளது.
நயினையில் தொடரும் அமுதசுரபி போன்று யாழ்ப்பாணத்தில் நாகபூசணி அருளுடன் கனகலிங்கம் திலகவதி முகவரூடாக தொடரும் பரிசு அலை ஓயாது. (17036)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2207
வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.10
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 37 45 47
ஆங்கில எழுத்து F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,900,532.40
செகன்ட் சான்ஸ் விசேட இல. 77643 257

சனிதா Shanida
திகதி 2023.09.10 வெற்றி வாரம் 4368 வர்ணம் இளஞ்சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 31 45 48 60
ஆங்கில எழுத்து V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,982,352.00
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 100,000/- பணப்பரிசு 74455 ரூ. 400/- பணப்பரிசு 909
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 374
சீட்டிழுப்பு திகதி 2023.09.10
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 16 | 21 | 25
இன்று இரண்டு இலட்சத்திற்கு அதிபதியானோரின் எண்ணிக்கை 06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,465,080/-
அபிவிருத்தி லொத்தர் சபை
இணையம் : www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3919
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.10
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 37 44 54
கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,906,472/-
செகன்ட் சான்ஸ் விசேட இல. 23529 156
அபிவிருத்தி லொத்தர் சபை

கப்ருக
திகதி 10.09.2023 வெற்றி வாரம் 1383 வர்ணம் மஞ்சள்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 18 15 17 62 63
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 438,170,124.20
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கு 15028 ரூ.400/- பணப் பரிசுகளுக்கு 770
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2033
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.09.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,385,848/-
வெற்றி இலக்கங்கள் 11 36 63 75
ஆங்கில எழுத்து P
செகன்ட் சான்ஸ் விசேட இல. Special No. ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கு 35872 ரூ.400/- பணப் பரிசுகளுக்கு 441
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் பேரவையின் தலைவர் வக்லவ் பலெக்கின் (செக் குடியரசு தூதுவர்) தலைமையில் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரையான ஒரு மாதகாலத்துக்கு நடைபெறவுள்ளது.

அதன்படி 54 ஆவது கூட்டத்தொடரின் முதலாம் நாளான இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ் தானிகர் வோல்கர் டர்க்கின் ஆரம்ப உரை இடம்பெறும். அதனைத்தொடர்ந்து இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ் தானிகரின் எழுத்துமூல அறிக்கை வாசிக்கப்படும். அதற்கு இலங்கை சார்பில் கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக தலைமையிலான பிரதிநிதிகள் குழு பதிலளிக்கும்.

அதேவேளை இக்கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானங்கள் எவையும் நிறைவேற்றப்படாத போதிலும், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த கலந்துரையாடல் இடம்பெறவிருப்பதுடன் இதில் உறுப்புநாடுகள் பங்கேற்கும். அதேபோன்று கூட்டத்தொடரின் இரண்டாம் வார நிகழ்வுகளைப் பொறுத்தமட்டில் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவின் அறிக்கை மீதான கலந்துரையாடல் இடம்பெறும். இதன்போது இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள், அச்சம்பவங்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிதல், நீதியை நிலைநாட்டல், இழப்பீடு வழங்கல் மற்றும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பன பற்றியும் விரிவாக ஆராயப்படும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இம்முறை உறுப்புநாடுகளுக்கு இடையிலான கலந்துரையாடலின்போது இலங்கைமீது வலுவான அழுத்தம் பிரயோகிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (7)


VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=

(17019)
T.P: 077 544 8503

Station Garden
Hotel and Restaurant
Chef/
Chef assistant/
Room Boy
தேவை.
தொடர்பு
077 581 8769
(17002)

விசா விண்ணப்பம்
கனடா பிரான்ஸ் லண்டன்
ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
கனடாவில் வேலைவாய்ப்பு 21 விசர்க்கள் மட்டும் கையிருப்பு உள்ளது
முடிவுத்திகதி (20.09.2023)
தொடர்பு : 9.00 am - 6.00 pm
குறிப்பு : அனைத்துத் தகவல்களும் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்
(நிபந்தனைக்குட்பட்டது)
AIRR VISA CENTRE,197 MAIN STREET JAFFNA.
077 266 6429,021 221 0599
077 877 4838
(17037)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17032)
076 825 7716 (ஆகாஸ்)

வெளிநாடுகளுக்கான
DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P: 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.
(17005)

CANADA VISA
1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (Jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
5) Caregiver Vacancy available - experience உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
Contact : VISA Consultant,
136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(17004)

வேலையாள் தேவை
மில் வேலைக்கு
அனுபவமுள்ளவர்
தேவை
(17031)
077 610 6643


ஏழாலை தெற்கு களபாவோடை
அருள்மிகு
வசந்த நாகபூசணி அம்பாள்
தேவஸ்தானம்
சண்டி ஹோமப் பெருவிழா - 2023
14.09.2023 சண்டி ஹோமப் பெருவிழா வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 11.00 மணிவரை நடைபெறும். 10 மணிக்கு மஹா அபிஷேகம், பூசை, சுவாமி உலா வருதல், அன்னதானம் இடம்பெறும்.
இங்ஙனம்
தேவஸ்தானம்
(17018)

மலிவு விற்பனை
SILVER SHIELD
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7229)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

வேலையாள் தேவை
பிரபல உணவகம் ஒன்றிற்கு
பின்வரும் வேலைக்கு
ஆள் தேவை.
Waiter
தூர இடங்களில் வசிப்போருக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 407 8235
(C-7234)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (16/09/2023)
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II (16/09/2023)
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 16.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -16/09/2023)
(C-7230)
Certificate Course in English
Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

A/L Day Class - தமிழ்
பா.பத்மநாதன்
B.A (Hons) (Tamil Spl) -1st Class
M.A (Tamil) - 1st Class
M.Ed (Hons) - 1st Class
Dip in Ed.
ASC - யாழ்.நகர் - கோலா சிற்றி.நாவலர் வீதி -13.09.2023 (3.00 P.M)
C.C.A - சுன்னாகம் - 12.09.2023 (3.00 P.M)
மொடேண் - சண்டிலிப்பாய் 15.09.2023 (3.00 P.M)
மகுடம் - உரும்பிராய் - 13.09.2023 (5.00 P.M)
சித்திவிநாயகர் -மல்லாகம் 16.09.2023 (7.00 A.M)
077 626 4640
(17034)

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ONLINE APPLICATIONS
✓VISA APPOINTMENTS
✓PASSPORT APPLICATION
✓POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-7233)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு
(C-7233)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org